# தமிழர் பொருளியல்

## வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/= | இதழ் - 60 | 10.03.2024



சிறகவரை செய்கையில் பூச்சிகள் மேலாண்மை 06

மண் இல்லாவிட்டாலும் மாடியில் தோட்டம் செய்யலாம் 12

கால்நடைகளில் குடற்புழுக்களால் ஏற்படும் இழப்புகளும் தீர்வுகளும் 18

# இலங்கை வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் காரணிகள் இவைதான்

# ஜப்பான் பொருளாதாரம் ஏன் சரிகிறது?



**சோம வள்ளியப்பன்**

சூரியன் முதலில் உதிக்கிற நாடு. சுறுசுறுப்புக்கும் உற்பத்தித் திறனுக்கும் பெயர் பெற்ற நாடு எனப்படும் ஜப்பான் குறித்து இரண்டு செய்திகள் வந்திருக்கின்றன. முதல் செய்தி, ஜப்பானின் பொருளாதாரம் கடந்த இரண்டு காலாண்டுகளாக வளர்ச்சி காணவில்லை. மாறாக, சுருக்கம் கண்டிருக்கிறது. பொருளாதார கணக்கீட்டின்படி இது பெருமந்தம் (ரெசஷன்).

இரண்டாவது செய்தி, ஒப்பீட்டு அளவில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இருந்து வந்த ஜப்பான், சற்று சறுக்கி, ஜெர்மனிக்கு அந்த இடத்தைக் கொடுத்துவிட்டு, நான்காவது இடத்திற்குப் போய்விட்டது. 2023-ம் ஆண்டின் 'ஜூலை-செப்டம்பர்' மற்றும் 'அக்டோபர்-டிசம்பர்' ஆகிய இரண்டு காலாண்டுகளில் முறையே மைனஸ் 2.9 மற்றும் மைனஸ் 0.4 சதவீதம் சுருக்கம் கண்டிருக்கிறது ஜப்பானின் ஜிடிபி. 'சுருக்கம்' என்றால், 2022-ம் ஆண்டில் அதே காலாண்டுகளில் இருந்ததைவிட 2023 காலாண்டுகளில் ஜிடிபி குறைவு. உலகின் மிகப்பெரும் பொருளாதாரம் அமெரிக்காதான்.

அதன் ஜிடிபி மதிப்பு, 27.97 டிரில்லியன் டாலர்கள். 18.56 டிரில்லியன் டாலர்களுடன் அடுத்த இடத்தில் சீனா உள்ளது. ஜெர்மனி 4.73 டிரில்லியன் டாலருடன் 3-வது இடத்திலும், ஜப்பான் (4.29 டிரில்லியன் டாலர்) 4-வது இடத்திலும், இந்தியா (4.11 டிரில்லியன் டாலர்) 5-வது இடத்திலும், இங்கிலாந்து (3.59 டிரில்லியன் டாலர்) 6-வது இடத்திலும் உள்ளன.

இந்த தரவரிசைக்கு அமெரிக்க டாலர் கணக்கில் மதிப்பிடுவதால், அமெரிக்க டொலருக்கு எதிரான உலக நாடுகளின் நாணய மதிப்பும், இந்த தரவரிசை முடிவில் தாக்கம் கொடுக்கிறது. மூன்றாவதிலிருந்து நான்காவது இடத்திற்கு ஜப்பான் இறங்கியதற்கு வெறும் 43,000 கோடி டொலர்கள் வேறுபாடே காரணம்! அந்த வேறுபாடு நாணய மதிப்பு மாறுபாட்டால் வந்திருக்கிறது.

### அமெரிக்க டொலருக்கு எதிராக:

ஜப்பானின் நாணயமான யென் (Yen) கடந்த சில ஆண்டுகளாகவே அமெரிக்க டாலருக்கு எதிராக மதிப்பு குறைந்து வருகிறது. ஜனவரி 2021 முதல் ஜனவரி 2024 வரையிலான 3 ஆண்டுகளில் 29ூ வீழ்ச்சி கண்டிருக்கிறது. கடந்த ஓராண்டில் மட்டும் 10ூ வீழ்ச்சி. மாறாக ஜெர்மனி (யும்) பயன்படுத்தும் 'யூரோ'வின் மதிப்பு, கடந்த மூன்றாண்டுகளில் அமெரிக்க டாலருக்கு எதிராக 4.56ூ மட்டும் குறைந்தது மட்டுமின்றி, கடந்த ஓராண்டில் 2.25% மதிப்பு அதிகரித்திருக்கிறது.

நாணய மதிப்புக் குறைவு மட்டும்தான் காரணமா என்று கேட்டால், தற்போதைய தரவரிசை மாறுதலுக்கு ஆம் என்றும் மற்றபடி ஜப்பானின் பொருளாதார 'ரெசஷனுக்கு' இல்லை என்றும் சொல்ல வேண்டும். ஜப்பானிய பொருளாதாரத்தின் பல வீனம் காரணமாகத்தான் ரெசஷன் மற்றும் அதன் நாணய மதிப்பு குறைவும் ஏற்பட்டிருக்கிறது. ஜப்பானிய பொருளாதாரம், வலுகுறைய ஒன்றல்ல. பல காரணங்கள் உள்ளன.

சமீபத்திய காரணங்கள் என்று பார்த்தால், மோட்டார் வாகனங்கள் தொழிலில் உச்சத்தில் இருந்த ஜப்பான், மின்சார வாகனங்கள் வருகைக்குப் பிறகு அந்த வாய்ப்பை இழந்திருக்கிறது. ஜப்பானின் பெரும் முதலாளிகள் தொடர்ந்து அவர்களது புதிய முதலீடுகளை வளரும் வெளிநாடுகளுக்கு எடுத்துச்செல்கிறார்கள். ஜப்பானில் ஊதியங்கள் உயரவில்லை. அதனால் மக்கள் செலவழிப்பது குறைந்திருக்கிறது. இவற்றையெல்லாம் கூட சரி செய்து விடலாம். ஆனால், உடனடியாக சரி செய்துவிட



முடியாத, பூதாகரமாக மிரட்டிக்கொண்டிருக்கும் ஒரு பிரச்சினை, நாட்டின் மனிதவளம்.

**முதியோர் தேசம்:**

2015-ம் ஆண்டிலிருந்து ஜப்பானின் மக்கள் தொகை தொடர்ந்து குறைந்து வருகிறது. 2015-ல் 12 கோடியே 70 லட்சமாக இருந்த மக்கள் தொகை, 2023-ல், 12 கோடியே 26 லட்சம் ஆக குறைந்துவிட்டது. 2022-ல் இறப்பு எண்ணிக்கை 15.6 லட்சம். பிறப்பு எண்ணிக்கை 7.71 லட்சம். குழந்தை பிறப்பு குறைந்துவிட்டதால், வாழும் மக்களின் சராசரி (மீடியன்) வயது அதிகம். குடிமக்களில் 50 சதவீதத்தினரின் வயது 49.1 க்கும் மேல்.

அதனால் ஜப்பானின் பலமாக இருந்த 'உற்பத்தித்திறன்' குறைகிறது. அதை சரிக்கட்ட ஜெர்மனியைப் போல ஜப்பானில் இளம் வயது வெளிநாட்டவர் அதிகமில்லை. சுமார் எட்டரை கோடி மக்கள்தொகை கொண்ட ஜெர்மனியில் வாழும் வெளிநாட்டவர் எண்ணிக்கை ஒன்றரை கோடி. அவர்களுக்கு பிறந்த பிள்ளைகள் அரை கோடி. ஆனால், 12 கோடி மக்கள் தொகை இருக்கிற ஜப்பானில் வெளிநாட்டவர்கள் எண்ணிக்கை சுமார் முப்பது லட்சம் மட்டுமே. உற்பத்தித் துறையில் ரோபோ இயந்திரங்களின் பயன்பாடும் வேண்டிய அளவுகளில் கூடவில்லை.



**பீனிக்ஸ் பறவைபோல:**

இரண்டாவது உலகப்போர், அணு ஆயுத தாக்குதல் போன்ற மிகப்பெரும் வீழ்ச்சிகளிலிருந்து, அதன் புத்தாக்கங்கள், கடுமையான உழைப்பு மற்றும் உற்பத்தித்திறன் காரணமாக, சாம்பலான பின்பு மீண்ட பீனிக்ஸ் பறவையைப் போல, உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக ஜொலித்த தேசம் ஜப்பான். 1960-க்கு பிறகு சில தசமங்களுக்கு, புல்லட் ரயில் வேகத்தில் வளர்ச்சிகண்ட பொருளாதார அதிசயம். ஏற்றுமதி செய்து தள்ளிய நாடு. ஆனால் எல்லாம் 1990 வரைதான்.

**திருப்புமுனை:**

இந்திய பொருளாதாரத்தில் எப்படி 1991-ம் ஆண்டு ஒரு திருப்புமுனை ஆண்டோ அதேபோல, ஜப்பானிய பொருளாதத்திற்கும் 1991 ஒரு திருப்புமுனை ஆண்டானது. எல்.பி.ஜி. என்படும் தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல் காரணமாக 1991-ம் ஆண்டிலிருந்து இந்தியா கூடுதல் பொருளாதார வளர்ச்சி பெற்றது. மாறாக, 1991-ம் ஆண்டு ஜப்பானில் நிகழ்ந்த 'ரியல் எஸ்டேட்' சிக்கல் காரணமாக, அப்போதிலிருந்து ஜப்பானின் பொருளாதாரம் வீழ்ச்சி காண ஆரம்பித்தது.

**அடிமேல் அடி:**

அவற்றை சரி செய்ய அரசாங்கம் பல நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கையில், 2008-ம் ஆண்டு வெளிவந்த அமெரிக்க சப்ரைம் பிரச்சினையும், அதனால், உலகெங்கும் உண்டான 'பொருளாதார சுணக்கமும்'. ஜப்பானை பாதித்தது. அதன்பிறகு ஜப்பானில் ஏற்பட்ட 'கிரேட் ஈஸ்ட் ஜப்பான் நிலநடுக்கம், அதனால் நாசம் விளைவித்த சுனாமி, 2011-ல் ஏற்பட்ட புக்குஷிமா அணுமின் கசிவு.

அதற்கு பிறகு வந்த கோவிட் 19 என அடி மேல் அடி விழ ஜப்பானிய பொருளாதாரம் எழ முடியாமல் தொடர்ந்து தடுமாறுகிறது. இதனால் 2010-ல் ஜப்பான் பொருளாதாரம் 3-ம் இடத்துக்கு பின்தங்கியது. சீன பொருளாதாரம் 2-ம் இடத்துக்கு முன்னேறியது.

சிக்கல்களை சமாளிக்க, அரசு கடன் தொகைகள், வட்டி குறைப்பு, உதவித் தொகைகள் என பலவிதங்களில் செலவு செய்ய வேண்டிவந்தது. குழந்தை பிறப்பை ஊக்குவிப்பதற்காக மட்டுமே மொத்த உள்நாட்டு உற்பத்தில் 4 % அளவு, பெற்றோருக்கு சலுகைகள், ஊக்கத்தொகைகள் கொடுக்க ஒதுக்கியிருக்கிறது.

**பெருகியுள்ள அரசு கடன்:**

அதனால், 2020-ம் ஆண்டு ஜப்பான் அரசு வாங்கி இருந்த மொத்த கடன் அந்த நாட்டின் உள்நாட்டு உற்பத்தி மதிப்பான ஜிடிபி போல 260% ஆகிவிட்டது. நாட்டின் நாணயத்தின் மதிப்பு குறைவு தொடர்ந்தது.

**நம்பிக்கை உண்டு:**

இப்படியெல்லாம் ஆகியும் கூட அன்னிய செலாவணி கையிருப்பில் ஜாப்பான்தான் இரண்டாம் இடம். 1.4 லட்சம் கோடி டாலர்கள். மக்களின் தனிநபர் வருமானம், ஆண்டுக்கு 52,120 டாலர்கள். (சீனா 19,160, இந்தியா 2,450 கூ). ஜப்பான் இன்னமும் பெரிய பொருளாதாரம்தான்.

கால சுழற்சி, பருவநிலை சுழற்சி போல தேசப் பொருளாதாரங்களிலும் ஏற்ற இறக்கங்கள் வரவே செய்யும். ஜப்பான் தற்போது சந்தித்துக்கொண்டிருக்கும் 'தளர்வு நிலை' யை அது தாண்டி வரும், வெளிச்சம் குறைவது சூரியனை மேகம் மறைப்பதால்தான். விரைவில் உழைப்புக்கு பெயர் போன ஜப்பான் தேசம் பொருளாதாரத்தில் மீண்டும் முந்தைய நிலையை அடைந்து முன் போல ஒளிரும் என்று நம்புவோம்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

## முடிவுக்கு வராத நெருக்கடிகள்...

“பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீண்டுவிட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், சமூகக் கட்டமைப்பில் மக்கள் வாழ்வதற்கான போராட்டத்தை எதிர்கொண்டுள்ளார்கள்” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோகா அபேசிங்க தெரிவித்திருக்கின்றார். பொருளாதாரப் பாதிப்பினால் நாட்டில் இறப்பு வீதம் உயர்வடைந்து, பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்திருக்கின்றது என்ற அதிர்ச்சியான தகவலையும் அவர் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் வெளிப்படுத்திய தகவலாக இது இருப்பதால், அரசாங்கத்தின் மீது சுட்டுவிரலை நீட்ட வேண்டும் என்பதற்காக அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று எடுத்துக்கொள்ள முடியாது. தகவல் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதாக இருப்பதால், அது நம்பகத் தன்மை உள்ளதாகவும், பெறுமதியானதாக இருக்கும் என்றும் நம்பலாம்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீண்டு வருவதாக அரசாங்கம் சொன்னாலும், பொருட்களுக்கான தட்டுப்பாடும் குறைந்திருக்கின்றதே தவிர நெருக்கடி குறையவில்லை. வரப்போகும் தேர்தலை இலக்காகக்கொண்டு சில பொருட்களின் விலைகளை அரசாங்கம் குறைத்திருக்கின்றது. ஆனால், பெரும்பாலான அத்தியவசியப் பொருட்களின் விலைகள் இன்னமும் உச்சத்தில்தான் இருக்கின்றது.

மின்சாரக் கட்டணம் குறைக்கப்படுவதாக அரசாங்கம் சொல்லிக்கொண்டாலும், ஒரு வருடத்துக்குள் சுமார் 200 வீதம் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. ஆனால், இப்போது 20 வீதம் மட்டுமே குறைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அதற்காக முன்னெடுக்கப்படும் பரப்புரை அரசாங்கம் தேர்தலை இலக்காகக்கொண்டுதான் செயற்படுகின்றதா என்ற கேள்வியைத்தான் எழுப்புவதாக இருக்கின்றது.

அரசாங்க தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டிலிருந்து 2 மில்லியனுக்கும் அதிகமானோர் வெளிநாட்டில் வேலை செய்வதற்கு அல்லது படிப்பதற்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அரசுக்கு சொந்தமான வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் (SLBFE) தரவுகள் 310,000 க்கும் அதிகமானோர் வெளிநாட்டு வேலைகளைப் பெற்று 2022 இல் இலங்கையை விட்டு வெளியேறியதாகக் குறிப்பிடுகிறது, இது வரலாற்றில் மிக அதிகமான எண்ணிக்கையாகும்.

இவ்வாறு வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுச் செல்பவர்களால் அதிகளவு அந்நியச் செலாவணி கிடைப்பதாக அரசாங்கம்சொன்னாலும், அது நிரந்தரமானதாக இருக்குமா என்ற கேள்வி உள்ளது. வெளிநாடு சென்றவர்கள் குடும்பங்களையும் அழைத்துக்கொண்டால், அந்த வருமானம் நாட்டுக்கு கிடைக்காமல் போகலாம். அதனைவிட திறமைசாலிகள் வெளியேறுவதால், நாடு பாரிய பின்னடைவைச் சந்திக்கிறது.

இவை அனைத்தும் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீண்டுகொண்டிருப்பதாக அரசாங்கம் சொன்னாலும், நிலைமைகள் ஆரோக்கியமானதாக இல்லை என்பதைத்தான் வெளிப்படுத்துகின்றன.

# உலகச் சமூக மாமன்றம் 2024 உயர்ந்து நிற்கும் நம்பிக்கை!

**அ.இருதயராஜ்**

நேபாளத்தின் தலைநகர் காட்மாண்டுவில், உலகச் சமூக மாமன்றத்தின் (ுழசடன ளுழஉயைட குழசரஅ 2024) மாநாடு பெப்ரவரியில் (15-19) நடந்து முடிந்துள்ளது. ‘இன்னொரு உலகம் சாத்தியம்’, ‘மாற்று உலகம் சாத்தியமே!’ என்கின்ற முழக்கங்களோடு ஆரம்பித்த இந்த மாநாடு, ஏறக்குறைய 60 தீர்மானங்களை முன்னிறுத்தியுள்ளது. தொடக்க நாளில் நடந்த பேரணியில் கூலித் தொழிலாளர்கள், விவசாயிகள், பழங்குடியினர் எனப் பல்வேறு பிரிவினர் கலந்துகொண்டது இன்னொரு சிறப்பம்சம்.

**மாநாட்டின் பின்னணி:**

உலகச் சமூக மாமன்றம், உலகமயமாக்கலுக்கு எதிராகவும் எதேச்சதிகாரங்களுக்கு எதிராகவும் 2001இல் பிரேசிலில் ஆரம்பிக்கப்பட்டது. 15 முறை இதன் மாநாடு பல்வேறு நாடுகளில் நடந்திருக்கின்றது. ஆசியாவில் மும்பையிலும் (2004), தற்போது நேபாளத்திலும் நடத்தப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 98 நாடுகளிலிருந்து ஐம்பதாயிரம் பேர் பங்கேற்றனர்.

1,400 அமைப்புகள் இதில் பிரதிநிதித்துவம் பெற்றன. 30-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து வந்த சர்வதேச இளைஞரணிக் குழுக்கள் கலந்துகொண்டன. பதிமூன்று வகையான மையத் தலைப்புகளில் கருத்தரங்கங்கள், கலந்துரையாடல்கள், விவாதங்கள் நடைபெற்றன.

குறிப்பாகப் பொருளாதாரம், புலம்பெயர் தொழிலாளர்கள் பிரச்சினை,சாதி வேற்றுமை, பாலின ஏற்றத்தாழ்வு, பண்பாட்டுத் தளத்தில் நடக்கின்ற போராட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு எனப் பல்வேறு தலைப்புகளில் உரையாடல்கள் நடந்தன. வேற்றுமையில் ஒற்றுமையையும் பன்மைத்துவத்தையும் கொண்டாடுகின்ற பண்பையும் இம்மாநாட்டில் பார்க்க முடிந்தது. நாட்டை ஆளும் அரசுக்கும் மதத்துக்கும் தொடர்பு இருக்கக் கூடாது என்ற முழக்கம் விண்ணை முட்டியது.

**போர்களும் புலம்பெயர்ந்தோரும்:**

சமகாலப் போர்களைப் பற்றி இம்மாநாட்டில் அதிகம்விவாதிக்கப்பட்டது. உக்ரைன் மீது ரஷ்யாவும், காசா மீது இஸ்ரேலும் நிகழ்த்திவரும் போர்கள், மணிப்பூரில் வெடித்த வன்முறைபோன்றவற்றால் பலர் உயிரிழந்ததையும், லட்சக்கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டிருப்பதையும் பற்றிக் கவலை தெரிவிக்கப்பட்டது.

போர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தரமான குடியிருப்புகள் வேண்டும் மனித உரிமை அடிப்படையில் அவர்களுக்கு அனைத்து உதவிகளும் கிடைக்கப் பெற வேண்டும் என்னும் குரல் ஓங்கி ஒலித்தது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு:**

சுற்றுச்சூழலுக்கு ஏற்படுகின்ற அநீதியானது பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி என்றே பெண் பேச்சாளர்கள் சுட்டிக்காட்டினர். இயற்கைப் பேரிடர், போர்கள், இனக் கலவரம், வறுமை, பட்டினி, கரோனா பொதுமுடக்கம் என்று எந்தச் சூழலை எடுத்துக்கொண்டாலும் அதிகமாகப் பாதிக்கப்படுவது பெண்களும் குழந்தைகளும் திருநர்களும்தான்.

இவர்கள் ஒன்றுகூடித் தங்களுக்கான அடையாளத்தை நிலைநாட்டவும், உரிமைகளைப் பெறவும் தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகின்ற உலகளாவிய மனிதர்களின் தோழமையைப் பெறுவதற்கும் உலகச் சமூக மாமன்றம் ஒரு பெரிய இடத்தை உருவாக்கியிருந்தது.

சர்வதேச இளைஞர்களின் சங்கமம்: சர்வதேச அளவில் உள்ள இளைஞர்களை ஒருங்கிணைக்கும் தளமாக உலகச் சமூக மன்றம் இருக்கிறது.

நவீன டிஜிட்டல் ஊடக உலகத்தில் இளைஞர்கள் எப்படி எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள், சமூக மாற்றத்தின் கருவிகளாக டிஜிட்டல் கருவிகளை எப்படி மாற்ற வேண்டும் என்றெல்லாம் அறிவுபூர்வமாக விவாதிப்பதற்கும் கலந்துரையாடுவதற்கு மான அரங்கத்தை உருவாக்கியிருந்தார்கள். இளைஞர்கள் தங்கள் தாய்மொழியிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றினர். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண டிஜிட்டல் யுகத்தில் நாம் புதிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எப்படிப் பரிமாறிக் கொள்ள முடியும், அவற்றை மக் களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் பயன்படுத்த முடியும் என்பதைப் பகிர்ந்துகொண்டனர்.

ஜனநாயக பூமி: உலகச் சமூக மாமன்றம் சமத்துவம், சமூக நீதி, சம வாய்ப்பு ஆகிய உயரிய மதிப்பீடுகளின் அடிப்படையில் பணிசெய்கின்ற மக்களையெல்லாம் ஒருங்கிணைக்கின்ற தளமாக அமைந்தது. மனித நேயத்துக்காகவும் மனித மாண்புகளுக்காகவும் உலகம் எங்கும் போராடிக்கொண்டிருக்கின்ற குரல்களின் சங்கமம் இது.

தொடக்க விழாவில் கலந்துகொண்டு பேசிய ஐ.நா.வின் பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டர்ஸ், “பல்வேறு விதங்களில் பாதிக்கப்பட்டு, கடைநிலையில் துன்பப்படும் மக்களுக்கு நம்பிக்கை தருகின்ற வகையிலும் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்குப் பொதுவான தீர்வுகள் தேடுகின்ற தளமாகவும் இந்த மாமன்றம் அமைந்திருக்கிறது.

எனவே, நாம் இந்தப் பூமியை அமைதியான சமத்துவமிக்க, ஜனநாயகப் பூமியாக மாற்ற வேண்டும்” என வலியுறுத்தினார். அவநம்பிக்கை மேகங்களை அகற்றுகின்ற வகையில், உலகச் சமூக மாமன்றம் நம்பிக்கையை விதைக்கும் நிகழ்வுகளைச் சிறப்பாக நடத்தியுள்ளது. அந்த நம்பிக்கை எவரெஸ்ட் சிகரம்போல உயர்ந்து நிற்கிறது!




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,71,250 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,86,800 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** சர்வதேச நாணய நிதியம் உண்மையில் இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுக்கின்றதா? அல்லது ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாப்பதற்காகச் செயற்படுகின்றதா?

**கா.தர்மராஜா,**
**வெள்ளவத்தை.,**
**கொழும்பு.**

**பதில் -** இறுதியாக கடந்த வாரம் நடைபெற்ற பேச்சுக்களின் போது நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதியைப் புகழ்ந்து பேசியிருந்தமையைப் பார்க்கும் போது உங்களுக்கு இந்தக் கேள்வி எழுந்திருக்கலாம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்தின் உறுதியான அர்ப்பணிப்பைப் பாராட்டுகின்றோம் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் ஜனாதிபதியை சந்தித்த போது இவ்வாற முற்பகுதியில் தெரிவித்திருந்தார்.

நிதி அமைச்சில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை இலங்கை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதால், அதன் பிரதிபலன்களை காண முடிந்துள்ளதாகவும் பீட்டர் ப்ரூவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வலுவடைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அர்ப்பணிப்புக்கும் பாராட்டுக்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது நாட்டை பொருளாதார சரிவிலிருந்து மீட்பதற்கான அரசாங்கத்தின் திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை அங்கீகரிப்பதானது இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையிலான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டு முயற்சியை வலியுறுத்துவதாக இந்தச் சந்திப்பின்போது, ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கையின் நிதி ஸ்திரத்தன்மை, கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகள், எதிர்கால நோக்கு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், நாட்டின் பொருளாதார செயற்பாடுகளின் பலதரப்பட்ட விடயப்பரப்புக்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

ஆரம்பத்தில் சில விடயங்களைச் செய்யப்



பண்ணுவதற்பாக நாணய நிதியம் அழுத்தங்களைக் கொடுத்தது என்பது உண்மை. அவற்றில் சிலவற்றை மட்டும் இலங்கை செய்தது. தற்போதைய நிலையில் அதாவது தேர்தல் எதிர்கொள்ளப்படும் பின்னணியில் ரணில் ஆட்சியில் தொடர்வதைத்தான் அவர்கள் வரும்புகிறார்கள் என்பதைத்தான் அவர்களுடைய அணுகுமுறை பிரதிபலிக்கின்றது. கடுமையான அழுத்தங்களை சில காலத்துக்கு எதிர்பார்க்க முடியாது.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 200/= |
| உருளைக்கிழங்கு | - 180/= |
| பச்சைமிளகாய் | - 300/= |
| தக்காளி | - 350/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 120/= |
| கோவா | - 400/= |
| கரட் | - 350/= |
| பூசணி | - 220/= |
| புடோல் | - 150/= |
| வாழைக்காய் | - 200/= |
| சின்ன வெங்காயம் | - 250/= |
| பெரிய வெங்காயம் | - 400/= |
| பாகற்காய் | - 450/= |
| வெண்டிக்காய் | - 250/= |
| கருணைக்கிழங்கு | - 100/= |
| பயற்றங்காய் | - 500/= |
| லீக்ஸ் | - 350/= |
| கறிமிளகாய் | - 400/= |
| போஞ்சி | - 600/= |
| கீரை - 1 பிடி | - 100/= |
| தேசிக்காய் | - 150/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 195/= |
| கனடா டொலர் - | 222/= |
| சீன யுவான் - | 41/= |
| யுரோ - | 327/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 223/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 383/= |
| சுவிஸ் பிராங் - | 339/= |
| அமெரிக்க டொலர் - | 303/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 205/= |
| கனடா டொலர் - | 231/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 341/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர் டொலர் | 235/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 399/= |
| சுவிஸ் பிராங் - | 357/= |
| அமெரிக்க டொலர் - | 314/= |

# சிறகவரை செய்கையில் பூச்சிகள் மேலாண்மை

க.தனுஷன்
பயிராக்கவியல், விவசாய பீடம்

கடந்தவாரம் சிறகவரையின் வர்க்கங்களின் தகவல்கள். காலநிலை தேவை, செய்கைக்கு பொருத்தமான பிரதேசங்கள், விதைத் தேவை, நாற்றுமேடை முகாமைத்துவம் பற்றி பார்த்தோம். இவ்வாரம் பூச்சி மேலாண்மை, பசளையிடல், நீர் வழங்கல், களைக் கட்டுப்பாடு, அறுவடை, விளைச்சல், சிறகு அவரையில் உள்ள ஊட்டசத்துக்கள் பற்றி பார்ப்போம்.

சிறகு அவரையில் பூச்சிகள் தொல்லை பெரிதும் இருக்காது. பூச்சிகள் வந்தாலும் வராவிட்டாலும் வாரம் ஒரு முறை வேப்ப எண்ணையை தெளித்து வந்தால் பூச்சிகள் தொல்லையிலிருந்து விடுபடலாம். அடுப்பு சாம்பலை எடுத்து பணி ஈரத்தில் கொடிகளின் இலைகள் மேலே தூவி விட்டால் அசுவினி பூச்சி மாவுப்பூச்சிகளின் தொல்லை குறையும். மற்றபடி பனிக்காலங்களில் புழுக்களின் தொல்லை கொஞ்சம் அதிகமாக இருக்கும். இனக்கவர்ச்சிப் பொறி, அல்லது விளக்குப் பொறி வைத்து தாய் பூச்சிகளை கவர்ந்து இழுத்து புழுக்களின் தொல்லையை குறைக்கலாம்.

சிறகு அவரைக்கு உரங்கள் என்று பெரிதும் கொடுக்கும்படி எதுவும் தேவைப்படாது. ஏனெனில் தனக்கு தேவையான ஊட்டசத்துக்களை வேரில் வாழும் பாக்டிரியாக்களின் உதவியுடன் தானே தயாரித்துக்கொள்ளும். மண் கலவையிலேயே சரியான முறையில் உரங்களை கொடுத்து விட்டாலே போதும். மற்றபடி காய்கறிகள் வரும்போது காய்கறிகள் கருகி போவதற்கான வாய்ப்புகள் இருக்கும்.

போரன் சத்து குறைபாடு இருந்தால் இதுபோல ஏற்படும். எருக்க இலைகளை எடுத்து நன்றாக அரைத்து அதை தண்ணீரில் கலந்து பூ பூக்கும் தருணத்தில் வேர்ப் பகுதியில் ஊற்றி விடலாம். இலைகள் மேலும் தெளித்து விடலாம். இப்படி தெளித்துக் கொண்டு வந்தால் காய்கள் வரும்போது காய்ந்து போகாமல் நன்கு திரட்சியான காய்கறிகள் கிடைக்கும்.

10வஃஹாய நல்ல உக்கிய சேதன பொருட்களை சேர்த்தல். பரிந்துரைக்கப்பட்ட இரசாயன பசளையை மேலதிகமாக சேர்த்தல். நடுகை செய்ய 2-3 நாட்களுக்கு முன்னர் அடிக்கட்டு பசளை இடல்.

### பசளை இட வேண்டிய காலம்

அடிக்கட்டு பசளை (நடுகை செய்ய 2 நாட்களுக்கு முன்)

1ம் மேற்கட்டு பசளை (நடுகை செய்து



4 நாட்களின் பின்)

1ம் மேற்கட்டு பசளை (நடுகை செய்து 10 நாட்களின் பின்)

யூரியா kg/ha

முச்சுபர் பொசுபேற்று kg/ha 215

மியுரைட்டு பொட்டாசு kg/ha 65

### நீர் வழங்கல்

உலர் கால நிலையில் கிழமைக்கு ஒரு தடவை பயிருக்கு நீர் வழங்கல். மணல் மண்ணுக்கு குறைந்த வீதத்தில் நீர் வழங்கல். வேர்ப்பகுதியில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்வது நல்லது.

### களைக் கட்டுப்பாடு

ஆரம்ப கட்டத்தில் பயிர் மெதுவாகவே



வளரும், ஆகையால் களைக்கட்டுப்பாட்டில் சிறந்த கவனம் செலுத்த வேண்டும். களைக்கட்டுப்பாடு விதை முளைத்து 1,3,5,7 மற்றும் 12ம் வாரங்களில் பரிந்துரைக்கப்படுகிறது.

ஒவ்வொரு 3-4 நாட்களில் காய்களை அறுவடை செய்தல். பரிந்துரைக்கப்பட்ட வர்க்கங்களில் 70-75 நாட்களில் முதல் அறுவடை பெறலாம். ஆனால் அதிகமாக சுதேச வர்க்கங்கள் பயிர் செய்யப்படுவதால் 90-100 நாட்களின் பின் அறுவடை பெறலாம். முதல் அறுவடை பெற்று 6-7 வாரங்களின் பின் மறு அறுவடை பெறலாம்.

விளைச்சல். SLS -44: 15-20 t/ha. கிருஷ்ணா: 27t/ha.

### சிறகு அவரையில் உள்ள ஊட்டசத்துக்கள்

உடலுக்கு தேவையான அனைத்து ஊட்டசத்துக்களையும் சரியான அளவில் கொண்டது சிறகு அவரை. வைட்டமின் A, வைட்டமின் C, கால்சியம், மற்றும் இரும்பு சத்து கொண்டது. மற்ற கொடி காய்கறிகளை விட, 20% அதிக புரதம்



கொண்ட காய்கறி சிறகு அவரையாகும். இலைகள் மற்றும் பூக்களில் 15% புரதம் உள்ளது. விதைகளில் 35% புரதமும் 18% கொழுப்பு சத்தும் உள்ளது. கருவுறும் தாய்மார்களுக்கு தேவையான போலிக் அமிலம் சிறகு அவரையில் அதிகம் உள்ளது.

அதனால் கர்ப்பிணி பெண்களுக்கு ஏற்ற சிறந்த காய்கறியாகும். புரோட்டின் சத்து குறைபாடுள்ள ஏழை எளிய மக்களுக்கு, சிறகு அவரை சிறந்த வரபிரசாதமாகும். அதிகளவில் புரோட்டின் சத்துக்கள் சிறகு அவரையில் உள்ளது. சிறகு அவரையின் இலைகளை கால்நடைகளுக்கு தீவனமாக கொடுக்கலாம். நல்ல ஊட்டசத்து கொண்ட உணவாக இது திகழ்கிறது. பல பயன் மிக்க தாவர வகைகளில் ஒன்றான சிறகு அவரையை தென்னை மரங்களில் ஏற்றி வளர்ப்பதால் சிறந்த பசுமை மூடாக்காகவும், மூடுபயிராகவும் உள்ளது. இதனால் தென்னையில் (Coconut) தோன்றும் வாடல், சாறுவடிதல் போன்ற நோய்களைத் தவிர்க்கலாம்.

அதிக ஊட்டசத்துக்கள் கொண்டது. தாவரத்தின் அனைத்து பகுதிகளுமே உண்ணக்கூடியது, மேலும் மருத்துவ பயன்பாட்டிலும் இடம்பெறுகிறது. கீரை போன்று இலைகளை சமைக்கலாம். பூக்களை சாலட்களில் பயன்படுத்தலாம். கொட்டைகளை பச்சையாகவோ, அல்லது சமைத்தோ உண்ணலாம். சோயாபீன் பயன்படுத்துவதை போல உணவுகளில் பயன்படுத்தலாம்.

## வரி விளம்பரம்




## classified advertisement

### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.
தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.
தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622
#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

# சுற்றுலாவிகளை கவரும் மன்னார் தொங்கு பாலம்

நிஷாந்தி பிரபாகரன்






மன்னார் தொங்கு பாலம் பல வருட வரலாற்றினைக் கொண்டுள்ளது. இது மன்னாரில் உள்ள புகழ்பெற்ற சுற்றுலாத்த லமாகும்.

மன்னாரில் 1935 ஆம் ஆண்டு மல் வத்துஓயாவின் (ஓயா என்றால் சிங்களத் தில் நீரோடை). குறுக்கே கட்டப்பட்ட 100 மீட்டர் நீளமும் 1.2 மீட்டர் அகலத்துடன் இரும்புத் தாள்கள் கொண்ட தொங்கு பாலம் இரண்டு வலுவான கேபிள்களால். பிடிக்கப்பட்டுள்ளது.

குஞ்சிக்குளம் தொங்கு பாலம் இலங் கையின் வடக்குப் பகுதியில் குஞ்சிக்குளத் தில் மேடவாச்சி- தலைமன்னார் நெடுஞ் சாலையில் அமைந்துள்ளது. இது "குஞ் சுக்குளம் தொங்கு பாலம்", குஞ்சிக்குளம் தொங்கு பாலம் அல்லது "குஞ்சிகுளம் எல் லென பலமா" அல்லது "குஞ்சிகுளம் சங்கிலி பலமா" என்றும் அழைக்கப்படும்.

உள்ளூர்வாசிகளின் கூற்றுப்படி, கடுமையான மழைக்கால வெள்ளத்தின் போது. பல மீட்டர் தொலைவில் வாகனம் செல்லக்கூடிய தரைப்பாலம் இருந்தாலும், அது தொங்கு பாலத்தை விட தாழ்வான மட்டத்தில் அமைந்து மழைக் காலத்தில் வெள்ளத்தில் மூழ்கும் காலத்தில் பாதசாரி கள் காட்டுப் பாதையின் நடுவில் ஓடையைக் கடப்பதற்கான ஒரே வழி பழைய தொங்கும் பாலமாகும்.

குஞ்சிகுளம் தொங்கு பாலத்திற்கு மன் னாரிலிருந்து மதவாச்சி-தலைமன்னார் நெடுஞ்சாலையில் சுமார் 42 கிலோமீட்டர் பயணித்து குஞ்சிக்குளத்தில் அமைந்துள்ள தொங்கு பாலத்தை அடையலாம்

மதவாச்சியிலிருந்து வரும்போது மடு தேவாலயத்திற்கு செல்லும் பாதையில் இருந்து 1.5 கிலோமீற்றர் முன்னதாக மத வாச்சியிலிருந்து இடதுபுறம் செல்லும் பாதையில் இந்த சுற்றுலாத்தலத்தை அடையலாம். இந்த சாலைக்கு சற்று முன்பு தொங்கு பாலத்திற்கு செல்லும் வழியுடன் சிறிய விளம்பர பலகை உள்ளது. இந்த சாலையில் 800 மீட்டர் பயணித்தால், Yoda Wewa கால்வாய் மீது கட்டப்பட்ட பழைய,பயன்படுத்தப்படாத எஃகு வளை வுப் பாலத்தைக் காணலாம். Yoda Wewa என்பது ததுசேன மன்னரால் (459-477) மல்வத்து ஓயாவில் இருந்து Yoda Wewa வுக்கு தண்ணீரைத் திருப்பி கட்டப்பட்ட 13 கிமீ நீளமுள்ள கால்வாய் ஆகும்.

2013 ஆம் ஆண்டில், யோதா எலா மீது புதிய ஆறு -அளவிலான கான்கிரீட் வளைவுப் பாலம் கட்டப்பட்டது. இங்கிருந்து ஐந்து வளைவு நதிக் கட்டுப்பாட்டு கிரினிட் பாலத்தைக் கடந்து சென்றவுடன் ஆற்றுக் கட்டுப்பாட்டுப் பாலம் மற்றும் எஃகு ஆர்ச் பாலம் செங்கோணத்தில் தெரியும். பின் னர் மல்வத்து ஓயாவிற்கு மீண்டும் உபரி நீரை வெளியேற்றும் ஓடையின் மீது ஒரு சிறிய அணை (Sapaththu Palama) ஒன்றைக் காணலாம். இந்தப் பாலத்தின் மீது மேலும் 600 மீட்டர் சென்ற பிறகு நீங்கள் தொங்கு பாலத்தை அடைவீர்கள்.



தொங்கு பாலத்திற்கு கீழே, மல்வத்து ஓயாவின் மேல் புதிய கொங்கிரீட் பால மும், Sapaththu Palama பாலமும் நிர்மா ணிக்கப்பட்டது. பாலத்தின் தளம் குட்டை யான மரக் கற்றைகளில் இரும்புத் தகடு களால் அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் சில மரப் பலகைகள் சிதைந்துவிட்டதாகத் தெரிகிறது மற்றும் சில இடங்களில், இந்த பலகைகள் ஆற்றை நோக்கி சாய்ந்துள் ளன. எனவே, மழைக்காலத்தில் கிராம மக்கள் பாலத்தின் குறுக்கே நடந்து சென் றாலும், பாலத்தின் குறுக்கே நடப்பது ஆபத் தானது என்கின்றார்கள்.

இந்த பாலம் குறித்து உள் நாட்டில்




பெரும்பான்மை மக்களுக்கு தெரியாதது. ஆனால் வெளிநாட்டு சுற்றுலா துறையினருக்கும் இதன் முக்கியத்துவம் தெரிந்து இருக்கின்றது பிரதேச சுற்றுலா துறை இந்த பாலத்தினை திருத்தி சுற்றுலா மூலம் வருவாய் பெருக்க தடையாக இருப்பது என்ன?

**குஞ்சிக்குளம்**

குஞ்சிக்குளம் மன்னார் மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற கிராமமாகும். வில்பத்து வனவிலங்கு சரணாலயத்தின் ஒரு பகுதியான அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் இந்தப் பாலம் அமைந்துள்ளது. மழைக் காலத்தில், பாலத்தின் மேல் தண்ணீர் பாய்கிறது, இது மிகவும் அழகாக காட்சியளிக்கிறது.

பெரும்பான்மையினருக்கு தெரியாத, குஞ்சிக்குளம் ஒரு கண்கவர் இடம். பகல் நேரத்தில், குஞ்சிகுளத்தின் தெருக்கள் பள்ளிக்குச் செல்வது, தண்ணீர் சேகரிப்பது, பக்கத்து வீட்டுக்காரர்களைப் பார்ப்பது மற்றும் ஆடு மேய்ப்பது போன்ற உள்ளூர் மக்களால் நிரம்பி வழிகின்றன. இரவில், தெருக்கள் காட்டு யானைகளால் ஆக்கிரமிக்கப்படுகின்றன, யானைகள் வாழை பழம் விளாம்பழங்களை தேடுகின்றன.

வடக்கு கிழக்கில் இருக்கும் வரலாற்று சிறப்பும் இயற்கை அழகும் சிங்கள அரசுக்கும் வெளிநாட்டு மக்களுக்கும் முக்கியத்துவமும் பெற்றிருக்க எம்மக்களுக்கு அதன் அருமை பெருமை புரியாமல் போவது ஏன்?

நம்மை நாம் மட்டம் தட்டுவது ஏன்?

எங்களை நாங்களே குறைத்து மதிப்பிடுவது எமது சமூகத்தின் தொடர் வீழ்ச்சிக்கு அடித்தளமாகின்றது.

நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட இலங்கையின் ஒவ்வொரு இடமும் ஒரு வரலாற்றைப் பேசும் விதமாகத்தான் அமைந்துள்ளது. நாட்டின் எந்த மூலைக்குச் சென்றாலும் வரலாற்றுக் கதை ஒன்றை நாம் கேட்டுவிடலாம். அதுவும் அந்த இடத்திற்கே உரித்தானதாகவும் இருக்கும்.

மன்னாரின் வரலாற்று தொன்மை மற்றும் இயற்கை வளங்கள் அதன் சிறப்புக்கள் குறித்த தேடலில் தமிழ் மொழியில் கிடைக்காத அரிய தகவல்கள் ஆங்கிலம் மற்றும் ஜேர்மன் மொழிகளில் கிடைக்கின்றது. குறிப்பாக வடக்கு கிழக்கின் வரலாற்று தொன்மையும் இயற்கை முக்கியத்துவமும் பெரும்பாலோனோருக்கு புரியப்படவே இல்லை.

* இலங்கை நாட்டின் பிரதான பொருளாதாரம் அந்நியச்செலாவணி சுற்றுலா துறையில் சார்ந்திருக்கின்றது. நாட்டுக்குள் சுற்றுலா துறையை மேம்படுத்தும் போது தொழில் வாய்ப்புகள் பெருகும். நாட்டு மக்களுக்கான வருமானம் அதிகரித்து சிறக்கும்.

எமது நிலங்களின் வளங்களின் பாதுகாப்பும் அதன் முக்கியத்துவமும் உணரப்படவில்லை என்றால் நாம் கற்ற கல்வியியம் பயனின்றி போகும். வருமானம் இல்லாமல் போனால் நாட்டின் கடன் பெருகும். எத்துணை கல்வி கற்றாலும் தொழில் வாய்ப்பு பெருகவில்லை என்றால் அது நாட்டுக்கு வீட்டுக்கும் பயன்படாமல் கற்றோர் எல்லாம் நாட்டை விட்டு வெளியேறுவர்.

* கடந்த கால போரின் வடுக்களை பேசியே காலம் கரைகின்றது. நம் நிலங்கள் நமது கைவிட்டு செல்கின்றது. இதை தவிர்க்க பிரதேசங்கள் வாரியாக சுற்றுலா துறையை வளப்படுத்தி உள்ளூர் மக்களுக்கு இளையோருக்கு வேலை வாய்ப்பை பெருக்கும் வழிகளை தேடுவோம். அதன் மூலமாக பிரதேசத்தையும் வளப்படுத்துவோம்.

அடுத்த வாரம் மற்றுமொரு சுவாரஸ்யமான விடயத்துடன் சந்திப்போம்.

**உள்ளூர்வாசிகளின் கூற்றுப்படி, கடுமையான மழைக்கால வெள்ளத்தின் போது. பல மீட்டர் தொலைவில் வாகனம் செல்லக்கூடிய தரைப்பாலம் இருந்தாலும், அது தொங்கு பாலத்தை விட தாழ்வான மட்டத்தில் அமைந்து மழைக்காலத்தில் வெள்ளத்தில் மூழ்கும் காலத்தில் பாதசாரிகள் காட்டுப் பாதையின் நடுவில் ஓடையைக் கடப்பதற்கான ஒரே வழி பழைய தொங்கும் பாலமாகும்**






# இலங்கை வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் காரணிகள் இவைதான்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கை, இயற்கை அழகு மற்றும் ஏராளமான வளங்களால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு தேசம், அதன் திறனை செழுமையாக பயன்படுத்த முடியாமல் பல தசாப்தங்களாக போராடுகின்றது. இந்த குறைவான செயல் திறனுக்கான காரணங்கள் பலதரப்பட்டதாக இருந்தாலும், மூன்று முக்கிய காரணிகள் தனித்து நிற்கின்றன.

திறமையின்மை, முறைசாரா மற்றும் ஒழுக்கக்கேடு ஆகியவையாகும். இந்த "மூன்று ஐ" கள் இடையூறுகளாகச் செயல் படுகின்றன, பொது மற்றும் தனியார் துறை களில் முன்னேற்றத்தைப் பெரிதும் தடுத்து இலங்கை ஒரு வளர்ந்த நாடாக மாறும் இலங்கையின் அபிலாஷைகளைப் பாரிய ளவில் தடுக்கின்றன.

1. திறமையின்மை (Inefficiency):

• அதிகாரத்துவ செயல் முறைமை: அதிகாரத்துவத்தின் கட்டமைப்புகள் மற்றும் சிக்கலான நடைமுறைகள் இலங்கை அமைப்புகளை பாதிக்கின்றன. அனுமதி கள், உரிமங்கள் அல்லது அடிப்படை அர சாங்க சேவைகளைப் பெறுவது பெரும்பா லும் ஆவணங்கள் மற்றும் ஒப்புதல்களின் ஒரு தளத்தை வழிநடத்துகின்றது, இது தாமதங்கள், ஏமாற்றம் மற்றும் ஊழலுக் கான வாய்ப்புகளுக்கு வழிவகுக்கின்றது. இது புதுமை மற்றும் தொழில் முனைவோர் உணர்வைத் தடுக்கின்றது, பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கின்றது.

• வெளிப்படைத்தன்மை இல்லாமை: வெளிப்படைத்தன்மை இல்லாத செயல் முறைகள் மற்றும் தகவலுக்கான வரை யறுக்கப்பட்ட அணுகல் ஆகியவை பொறுப் புக்கூறல் பலவீனமாக இருக்கும் சூழலை உருவாக்குகின்றன. இது திறமையின்மை மற்றும் தவறான நிர்வாகத்தை வளர்ப்ப தாக அமைவதுடன் அவற்றினை இல்லாமல் செய்வதற்கு பெரும் தடையாக காணப்ப டுகின்றது.

• வளங்களின் தவறான ஒதுக்கீடு: பயனற்ற வள ஒதுக்கீடு சிக்கலை மேலும் மோசமாக்குகின்றது. பற்றாக்குறையான வளங்கள் பெரும்பாலும் பலனளிக்காத முயற்சிகளை நோக்கி செலுத்தப்படுகின்றன அல்லது திறமையற்ற முறையில் நிர்வகிக் கப்படுகின்றன. அதிக சாத்தியமுள்ள வரு வாயைக் கொண்ட பகுதிகளிலிருந்து அவற் றைத் திசை திருப்புகின்றன.

இலங்கையில் வளங்கள் தவறாக ஒதுக்கப்பட்டதற்கான சில எடுத்துக்காட்டுகள் இங்கே:

• அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் (SOEs): இலங்கையில் அதிக எண்ணிக்கை யிலான SOEகள் உள்ளன. அவற்றில் பல திறமையற்றவை மற்றும் லாபம் அற்றவை. இந்த நிறுவனங்கள் பெரும்பாலும் அரசாங்க மானியங்களைப் பெறுகின்றன. இது பொரு ளாதாரத்தின் அதிக உற்பத்திப் பகுதிகளை நோக்கி சிறப்பாக இயக்கப்படலாம்.

• விவசாயக் கொள்கை: அரசு வரலாற்று ரீதியாக விவசாயத் துறையில் தலையிட்டது, பெரும்பாலும் எதிர்மறையான விளைவு களை ஏற்படுத்தியிருந்தது. எடுத்துக்காட்டாக, அரிசி மீதான விலைக் கட்டுப்பாடுகள் விவசா யிகளை அதிக உற்பத்தி செய்வதிலிருந்து ஊக்கமளிக்கவில்லை, இது பற்றாக்குறை மற்றும் அதிக விலைக்கு வழிவகுத்தது.

• வர்த்தகக் கொள்கை: இலங்கையின் வர்த்தகக் கொள்கை ஒப்பீட்டளவில் பாது காப்பு அற்ற முறைமையில் உள்ளதுடன், இது உள்நாட்டுத் தொழில்களை போட்டியில் இருந்து போதிய அளவில் பாதுகாப்பாக அமையாமலும், மேலும் திறமையானதாக மாறுவதை ஊக்கப்படுத்துவதாக அமை யாது காணப்படுகின்றது.

• உட்கட்டமைப்பு முதலீடு: நிலையங் கள் குறிப்பாக விமான நிலையங்கள் மற் றும் நெடுஞ்சாலைகள் போன்ற பொருளா தார ரீதியாக சாத்தியமில்லாத உள்கட்ட மைப்பு திட்டங்களில் அரசாங்கம் அடிக்கடி முதலீடு செய்துள்ளது. இந்த திட்டங்கள் வளங்களை அதிக உற்பத்தி முதலீடுகளி லிருந்து திசை திருப்புகின்றன.

• கல்வி மற்றும் சுகாதாரம்: ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒப்பீட்டளவில்

குறைந்த விகிதத்தை கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக செலவிடுகிறது. இந்த குறைந்த முதலீட்டால் திறமையான பணியாளர்கள் பற்றாக்குறை மற்றும் சுகாதார சேவைகளின் தரம் குறைகின்றது.

இவை இலங்கையில் வளங்கள் தவறாகப் பகிர்ந்தளிக்கப்பட்டதற்கான சில உதாரணங்கள் மட்டுமே. சிக்கலான அரசியல் மற்றும் பொருளாதார காரணிகளின் விளைவாக பெரும்பாலும் இந்த பிரச்சினைக்கு எளிதான தீர்வு இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம், இலங்கை தனது பொருளாதாரத் திறனை மேம்படுத்தி, நிலையான அபிவிருத்தியை ஊக்குவிக்க முடியும்.

• விவசாயம், தொழில் மற்றும் சேவைகள் போன்ற பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் வளங்களை தவறாகப் பகிர்வதன் தாக்கம்.

தவறாக பயன்படுத்துவதன் விளைவு: வளங்களின் தவறான ஒதுக்கீடு இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கின்றது.

இந்த "மூன்று ஐ" திறமையின்மை, முறைசாரா மற்றும் ஒழுக்கக்கேடு-இலங்கையின் வளர்ச்சியின் மீது நீண்ட தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பற்றாக்குறையான வளங்கள் பயனற்ற முயற்சிகளை நோக்கி செலுத்தப்படும் போது அல்லது திறமையற்ற முறையில் நிர்வகிக்கப்படும் போது, அதன் தாக்கம் முழுப் பொருளாதாரத்திலும் அலை அலையாகி, பல்வேறு துறைகளை பல்வேறு வழிகளில் பாதிக்கின்றது.

வேளாண்மை:

• விலைக் கட்டுப்பாடுகள் மற்றும் சிதைவுகள்:

அரிசி மீதான விலைக் கட்டுப்பாடுகள் போன்ற அரசின் தலையீடுகள், மலிவு விலையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டதாக இருந்தாலும், பெரும்பாலும் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இந்தக் கட்டுப்பாடுகள் உற்பத்தியை அதிகரிப்பதில் இருந்து விவசாயிகளை ஊக்கப்படுத்துவதாக அமையாததனால், பற்றாக்குறை மற்றும் விலை உயர்வுக்கு வழிவகுப்பதுடன், இறுதியில் விவசாயிகள் மற்றும் நுகர்வோர் இருவருக்கும் தீங்கு விளைவிப்பதாக அமைகின்றது.

• மானியங்கள் மற்றும் திறமையின்மை: விவசாயிகளுக்கு ஆதரவளிக்கும் நோக்கம் கொண்டாலும், உரம் மற்றும் எரிபொருள் மானியங்கள் மோசமாக இலக்கு வைக்கப்பட்டு, சிறு விவசாயிகளை விட பெரிய அளவிலான வணிகப் பண்ணைகளுக்கு பயனளிப்பதாக காணப்படுகின்றது. இதன் காரணமாக இந்தத் துறை பெரிதும் அரசாங்கத்தை சார்ந்து இருப்பதுடன் நிலையான விவசாய நடைமுறைகளில் புதுமைகளை



ஊக்கப்படுத்தாமல் அமைந்து விடுகின்றது.

• உட்கட்டமைப்பு இடைவெளிகள்: நீர்ப்பாசன அமைப்புகள், சேமிப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து நெட்வொர்க்குகள் போன்ற கிராமப்புற உள்கட்டமைப்புகளில் போதிய அளவு முதலீடு இல்லாததால் விவசாய உற்பத்தி மற்றும் சந்தை அணுகல் தடைபடுகின்றது, அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் மற்றும் விவசாயிகளின் வருமானம் குறைகின்றது.

உற்பத்தி மற்றும் தொழில் துறை:

• பாதுகாப்பான வர்த்தகக் கொள்கைகள்: அதிக கட்டணங்கள் மற்றும் இறக்குமதி கட் டுப்பாடுகள் உள்நாட்டு தொழில்களை போட்டி யிலிருந்து பாதுகாக்கின்றன. தற்காலிக பாதுகாப்பை வழங்கும் அதே வேளையில், இது புதுமை மற்றும் செயல்திறன் மேம்பாடுகளை ஊக்கப்படுத்தாமல் காணப்படுவதுடன், இது உலக சந்தையில் போட்டித் தன்மையை குறைக்கின்றது.

• அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் (SOEs): பல SOE கள் திறமையின்மை மற்றும் தவறான நிர்வாகத்தால் பாதிக்கப்படுகின்றன, அதிக உற்பத்தி திறன் கொண்ட தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கக்கூடிய வளங்களை உள்வாங்குகின்றன. இது நியாயமற்ற போட்டியை உருவாக்குகின்றது மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கின்றது.

• நிதிக்கான வரையறுக்கப்பட்ட அணுகல்: தொழில்துறை வளர்ச்சிக்கு முக்கியமான சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்; (SMEs), சிக்கலான விதிமுறைகள் மற்றும் அதிகாரத்துவ தடைகள் காரணமாக கடனை அணுகுவதில் பெரும்பாலும் சிரமப்படுகின்றன. இது அவர்களின் முதலீடு, விரிவாக்கம் மற்றும் வேலைகளை உருவாக்கும் திறனைக் கட்டுப்படுத்துகின்றது.

சேவைகள்:

• முறைசாரா துறை ஏற்றம்: வேலை வாய்ப்புகளை வழங்கும் அதே வேளையில், பெரிய முறைசாரா துறையானது விதிமுறைகளுக்கு வெளியே செயல்படுகின்றது, வரி வருவாயைக் கட்டுப்படுத்துகின்றது மற்றும் முறைப்படுத்தலைத் தடுக்கின்றது. இது முறையான வணிகங்களுக்கு நியாயமற்ற போட்டியை உருவாக்குகின்றது மற்றும் முறைசாரா தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நலன்களுக்கான அணுகலை கட்டுப்படுத்துகின்றது.

• திறன்கள் பொருந்தாமை: கல்வி முறையானது சேவைத் துறையின் வளர்ச்சியடைந்து வரும் தேவைகளுடன் போதுமான அளவில் இணைக்கப்படாமல் இருக்கலாம், இது பட்டதாரிகளிடையே திறன் பொருத்தமின்மை மற்றும் வேலையின்மைக்கு வழிவகுக்கும். இது சேவை சார்ந்த தொழில்களில் உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கின்றது.

• திறமையற்ற பொது சேவைகள்: அதிகாரத்துவம் மற்றும் கடுமையான விதிமுறைகள் ஆகியவை செயல்முறைகளை மெதுவாக்குகின்றன மற்றும் சேவைத் துறையில் செயல்படும் வணிகங்களுக்கான செலவுகளை அதிகரிக்கின்றன, முதலீடு மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தாது காணப்படுகின்றது. இது குடிமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தையும் எதிர்மறையாக பாதிக்கின்றது.

இவை ஒரு சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே, குறிப்பிட்ட துறை மற்றும் சூழலைப் பொறுத்து வளங்களை தவறாகப் பிரிப்பதன் தாக்கம் மாறுபடும். எவ்வாறாயினும், ஒட்டுமொத்த விளைவு மறுக்க முடியாதது: இது பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கின்றது, போட்டித்தன்மையைக் குறைக்கின்றது, ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கிறது மற்றும் இலங்கையின் வளர்ச்சிப் பாதையைத் தடுக்கின்றது.

இந்த சவாலை எதிர்கொள்ள, பல முனை அணுகுமுறை முக்கியமானது:

• சீர்திருத்தக் கொள்கைகள்: விவசாயத்திற்கான இலக்கு ஆதரவைச் செயல்படுத்துதல், வர்த்தகத் தடைகளைக் குறைத்தல் மற்றும் ஏழுறு களில் செயல்திறனை மேம்படுத்துதல்.

• புத்திசாலித்தனமாக முதலீடு: உட்டமைப்பு மேம்பாட்டிற்கு முன்னுரிமை கொடுங்கள், SME களுக்கான நிதி அணுகலை மேம்படுத்துதல் மற்றும் சந்தை தேவைகளுடன் கல்வியை சீரமைத்தல்.

• ஊழலை எதிர்த்துப் போராடுதல்: வெளிப்படைத் தன்மையை நடைமுறைப் படுத்துதல், நிறுவனங்களை வலுப்படுத்துதல் மற்றும் அதிகாரிகளை பொறுப்பாக்குதல்.

வளங்கள் தவறாகப் பகிர்ந்தளிக்கப்படுவதைக் கையாள்வதன் மூலம், இலங்கை அதன் உண்மையான ஆற்றலைத் திறந்து மேலும் உள்ளடக்கிய மற்றும் வளமான எதிர்காலத்திற்கு வழி வகுக்க முடியும்.

அடுத்த வாரமும் ஆராய்வோம்.



# மண் இல்லாவிட்டாலும் மாடியில் தோட்டம் செய்யலாம்

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இந்தியாவில் வசித்து வரும் ஈழத் தமிழன் ஒருவர் ,தனது மூன்று மாடி வீட்டில் வித்தியாசமான முறையில் காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை வளர்த்து வருகிறார்.

அவரது குடும்பத்தினர் இதன் மூலம் லட்சக்கணக்கான வருமானம் பெறுகின்றனர் என்பதை கேட்கும்போது உங்களுக்கு ஆச்சரியமாக கூட இருக்கக் கூடும். ஆனால், அதுதான் உண்மை.

வீட்டுக்குள் செய்யப்படும் இந்த விவசாய முறையில் மற்றொரு அச்சரியமும் உள்ளது. நீரை மட்டுமே சார்ந்து செய்யப்படும் இந்த விவசாயத்துக்கு மண் தேவையில்லை. ஹைட்ரோபோனிக் எனப்படும் இந்த விவசாய முறை இந்தியாவுக்கு புதியது.

தூரத்தில் இருந்து பார்க்குபோது மற்ற வீடுகளை விட இவரது வீடு பசுமை போர்த்தியது போன்று தனித்து காணப்படுகிறது.

வீட்டின் ஒவ்வொரு மாடியிலும் விதவிதமான காய்கறிகளின் கொடிகள் பிளாஸ்டிக் குழாய்களில் வளர்வது தெரிகிறது. வீட்டின் ஒவ்வொரு தளத்திலும், வெளியிலும், பிற இடங்களிலும் தடிமனான பிளாஸ்டிக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. இந்த குழாய்கள் வெளிப்புற சுவர்களுக்கு இணையாக வைக்கப்படுகின்றன, அவை எல்லா நேரங்களிலும் தண்ணீரால் நிரப்பப்படுகின்றன.

காய்கறி விதைகள் பிளாஸ்டிக் வாளிகள் போன்ற சிறிய கூடைகளில் தேங்காய் பட்டை மற்றும் மலைகளில் இருந்து கொண்டு வரப்பட்ட ஒரு வகையான பாசியுடன் வைக்கப்படுகின்றன. இதற்குப் பிறகு, குழாயின் துளையில் வாளி வைக்கப்படுகிறது, அங்கு விதைகள் தண்ணீரில் மூழ்கிய பின் முளைக்கத் தொடங்கும். மூன்று நான்கு வாரங்களில் காய்கறிகள் கிடைக்க ஆரம்பிக்கும்.

மண் தேவையில்லை, தண்ணீர் மட்டுமே போதும் கத்தரிக்காய், முட்டைக் கோஸ், மிளகாய், கொத்தமல்லி, வெந்தயம், ப்ரோக்கோலி மற்றும் பல காய்கறிகள் ரன்பீரின் வீட்டில் வளர்க்கப்படுகின்றன. குழாய்க்குள் இருக்கும் தண்ணீரில் இவை வளர்கின்றன. இவற்றுக்கு மண் தேவையில்லை. இந்த வகை விவசாயத்தில், தண்ணீரும் மிகக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்படுகிறது.

“இந்த வகை விவசாயத்துக்கு தொடக்கத்தில் தண்ணீர் குழாய்கள் அமைப்பதற்கு செலவு ஆகும். அதன் பின்னர், காய்கறி விளைவிப்பதற்கான செலவு குறையும். ” என்று அவர் கூறுகிறார்.

## நேர்கண்டவர்
## ஞானம் கவினி

காய்கறிகளை பூச்சிகளிடம் இருந்து பாதுகாக்க வீட்டின் கூரையில் பாலித்தின் கவர்களை பயன்படுத்துவதாகவும் காய்கறி, பழங்களை அணில், குரங்குகளிடம் இருந்து பாதுகாக்க வீட்டை சுற்றை வலை அமைத்துள்ளதாகவும் ராம்தெரிவித்தார்.

பல மைல் தூரத்தில் இருந்து வந்து காய்கறிகளை வாங்கி செல்லும் மக்கள் இந்த முறை விவசாயத்தில் காய்கறிகளை பராமறிக்க அதிக கவனம்தேவை என்பதால், நாம் பயன்படுத்தும் சாதாரண காய்கறிகளை விட இவற்றின் விலை அதிகம் என்கிறார் ராம்.

காய்கறிகள் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலையில் சுத்தமான நீரில் வளர்வதால் மிகவும் புதிதாக இருப்பதோடு, மற்ற காய்கறிகளை விட இவற்றின் தரம் மிக அதிகம் என்றும் அவர் கூறுகிறார்.

உறுப்பினர் சேர்க்கை மூலம் இந்த காய்கறிகளை பரோலியில் அவர் விற்பனை செய்து வருகிறார். இந்த காய்கறிகளை வாங்க மக்கள் குறிப்பிட்ட நாளில் அவரது வீட்டிற்கு வருகிறார்கள்.




### லட்சக்கணக்கில் வருமானம்

இந்த தனித்துவமான விவசாய முறை மூலம் ஆண்டுக்கு பல லட்சம் ரூபாய் சம்பாதிப்பதாக கூறும் ராம், ஹைட்ரோ போனிக் முறையை பயன்படுத்தி பெரிய அளவில் விவசாயம் செய்யவும் திட்ட மிட்டுள்ளார்.

“ஆண்டு முழுவதும் வேளாண்மை அறிவியல் மாணவர்கள், விவசாயிகள் ஆகியோர் என் வீட்டுக்கு வந்த இந்த விவசாய முறை குறித்து கேட்டு அறிந்து கொள்கின்றனர். சமீபத்தில் இந்த விவசாய முறை தொடர்பாக பயிற்சி மையம் ஒன் றையும் தொடங்கியுள்ளேன் ” என்று அவர் குறிப்பிட்டார்.

இவரின் தனித்துவமிக்க விவசாயத் தின் புகழ் தற்போது எங்கும் பரவி வருகிறது. காய்கறிக் கொடிகள் சூழ்ந்திருக்கும் இவ ரின் வீட்டைக் காண ஊரின் வெகு தொலை வில் இருந்து மக்கள் வருகிறார்கள்.

என்னதான் இந்தியாவில் விவசாயம் செய்தாலும் தன் தாய் தேசத்தில் வீட்டைச் சுற்றியுள்ள தன்னுடைய நிலங்களில் விவசாயம் செய்ய வேண்டும் என்ற அவா நிறைவேறாமல் போனது என்று தனது ஆதங்கத்தை தெரிவிக்கிறார்

**காய்கறி விதைகள் பிளாஸ்டிக் வாளிகள் போன்ற சிறிய கூடைகளில் தேங்காய் பட்டை மற்றும் மலைகளில் இருந்து கொண்டு வரப்பட்ட ஒரு வகையான பாசியுடன் வைக்கப்படுகின்றன. இதற்குப் பிறகு, குழாயின் துளையில் வாளி வைக்கப்படுகிறது, அங்கு விதைகள் தண்ணீரில் மூழ்கிய பின் முளைக்கத் தொடங்கும். மூன்று நான்கு வாரங்களில் காய்கறிகள் கிடைக்க ஆரம்பிக்கும்.**





# கல்லெல்லாம்

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

எமது தேவைகளை நாம் எங்கிருந்து பெற்றாலும் அவை உற்பத்தி செய்தபடியோ அல்லது அவற்றை மண்ணிலிருந்து பெற்ற படியோ நாம் பயன்படுமுத்த முடிவதில்லை. யாரோ ஒருவர் அல்லது பலர் அதை பண் படுத்தும் தொழிலை செய்கிறார்கள். இன் றைய உலகில் நாம் யாரும் தனித்து தமது தேவைகளை நிறைவேற்ற முடியாது.

அவற்றை எமக்கு பண்படுத்திதர ஒரு வரோ பலரோ பல கிராமங்களோ பல நாடுகளோ பங்கேற்க வேண்டியுள்ளது. கோதுமையை அல்லது நெல்லை விளை விக்கும் ஒருவரால் அதை அப்படியே உண்ண முடியாது எனபது நாம் அறிந்ததே. அதை அரிசியாக மாவாக மாற்றி பின்னர் அதை விதவிதமாக சமைத்து நமக்கு பயன்படச் செய்யபவர்கள் இருக்கிறார்கள். நாம் விளையும் பொருட்களுடன் திருப்தி அடைய முடியாது. அணிவதற்கு ஆடை வேண்டும். அதை அதற்கான மூலப் பொருளை விளைவித்தோ தயாரித்தோ ஒருவர் வழங்க வேறொரு இடத்தில் அவை அடைகளாகின்றன. இப்படி ஒவ்வொன் றையும் சொல்லிக் கொண்டே போகலாம்.

அரசாங்கம் ஒரு காணிக்கான அனும திப்பத்திரத்தை கொடுககும்போது பூமிக்கு மூன்றடிக்குள்ளும் பூமிக்கு மூன்றடிக்கு மேலும் புராதனப் பொருட்கள் இருந்தால் அது அரசாங்கத்தின் சொத்தாகும் என அறிவிக்கிறது. இந்த அறிவித்தலை கவனம் கொள்ளாமல் மண் அகழ்வது பற்றி நாம் எல்லோரும் அறிவோம். நான் இன்று பேசப் போவது கல் அகழ்வுதுபற்றி. யாழ்ப்பா ணத்தில் தோட்டம் செய்யும் பெருவாரியான நிலங்களில் கல் அகழ்வு நடந்த பின்பே அது பயிர் செய்கைக்கு தயாராகும் என்ற செய்தி எனக்கு புதியதாக இருந்தது. அட ஆமாம். தோட்டக்காணியில் கல் அகழ்வது பெரும் பொருட் செலவை தருவதாக கூறி னார்கள். அதேசமயம் அந்த கற்களும் சுண்ணக்கற்களாக இருந்தன. அவை நல்ல விலைக்கு விற்கவும் முடிந்தது.

வன்னியில் கருங்கல் இப்படி அகழப்ப டும் அதை குறிப்பிட்ட சில தொழிலாளர்களே செய்வார்கள் அவர்களது முயற்சி சுமார் முப்பதாண்டுகளுக்கு முன் மிகவும் கடு மையானதாக இருந்தது. பெரிய ஒரு பாறையை அவர்கள் நிலத்தின் அடியில் கண்டபின் அது தமது வேலைக்கு தோதா னதா என கண்ட மாத்திரத்திலேயே சொல் வார்கள். கல்லு முதல் எதற்கு கிண்டி எடுக் கிறார்கள் என்பதை பார்த்தால் இன்று எமது மண்ணில் காணப்படும் ஆயிரக் கணக்கான கோவில்களின் சிற்பங்கள் இந்த கற்கள்தான் என்பது ஒரு பெரிய விட யமே இல்லை. லட்சக்கணக்கான வீடுகளில் உரலாக, ஆட்டுக்கல்லாக. அம்மியாக, திரிகைக்கல்லாக, உருமாறி வருடக்கணக் கில் ஏன் பல தலைமுறை கடந்தும், வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்காக உழைத்துக் கொண்டிருப்பன இந்தக் கற்கள்தான்.

இவை நீங்கள் நினைப்பது பொல பூமிக’கு மேலே கிடைப்பதல்ல அப்படி கிடைத்தாலும் அந்த தொழிலாளர்களின் உளிக்கு வாகாக அமைவதில்லை. கற்களில் கடுவல்கல் ஓட்டைக்கல் பிரிவு என பல வகையில் இனம் காண்பார்கள். மேற்குறித்த



வீட்டுப்பாவனைப் பொருட்களை உருப்படி என்பார்கள். எப்போதும் உருப்படிக்கான கற்கள் பூமிக்குள்ளிருந்துதான் தோண்டி யாக வேண்டும். அவை பாறைத்தொடர்க ளாக இருத்தலாகாது. குறிப்பிட்ட அளவில் போளைகளாக திரண்ட உருளைகளே சரியானதாகும். இப்படி பூமியின் அடியில் மேல்பரப்பை பார்த்ததுமே இது போளை, இது தொடர் என இனங்காண அந்த தொளி லாளியால் முடிகிறது.

அதுமட்டுமல்ல அந்த போளை கடுவலா? எனபதும் தெரியும் தெரிந்தபின் அந்த போளையை சுற்றியுள்ள மண்ணை கிணறு வெட்டுவதுபோல கஸ்டப்பட்டு வெளியே அகற்றி பெரிய பள்ளம் தோண்டி இந்த போளையின் முழு அளவையும் கண்பார்வைக்குள் வைப்பர் சுமார் பத்தடி சுற்றளவோ அதற்கு அண்மித்த அளவுக ளிலோ பாறை கிடைக்கும் அதை அப்படியே வெளியே கொண்டு வர முடியாது. எனவே அதை தனியாக நிறுத்தியபின், அதில் என் னென்ன உருப்படிகள் எத்தனை அடிக் கலாம் என்பதை திட்டமிட்டு தம்மிடமுள்ள ஆப்புகளையும் சிலக்ஸையும் கொண்டு கேக் துண்டுகளைப்போல சதுரம் சதுரமாக அந்த மலையை பிளப்பார்கள். சற்றும் பிசகாது அவுர்கள் அதை கூறு போடுவது. மிகக் கடினமான வேலை. எனினும், நேர்த்தியாக அதை துண்டுகளாக வெட்டி யபின் அவை அனைத்தும் அந்தக்குழி யுள்தானே நிற்கும். அவற்றை மேலே தாம் வேலை செய்யும் இடங்களுக்கு கொண்டு செல்ல மேடேற்ற வேண்டும்.

இப்போது அந்தக்குழியிலிருந்து மேட்டுக்கு ஒரு சாரம் போடுவார்கள் அதா வது சரிவாக ஒரு பாதை. அதில் பின்புறம் தாங்கிகளாக முண்டுகளை கொடுத்து ஆளும் பேருமாக உருட்டி உருட்டியே மேலே நகர்துவார்கள். மேலே வந்த கற் துண்டங்களை வாகனத்தில் தூக் கிப்போட ஒரு பாரம் தூக்கி (கிரேன்) பயன்படும். அதுவரை மனித முயற்சிதான்.

அப்படி தூக்கிய கற்கள்தான் இன்னும் வீடுகளில் உண்டு. இப் போது 'ஜேசீப்பீ' மெசினை வைத்து மிக இலகுவாக கிடங்கையும் தோண்டி கற்களையும் வெளியே கொண்டு வந்தாலும் கற்களை துண்டாக்கும் வேலை ஆப்புகளுக் கும் சுத்தியல்களுக்கும்தான்.

அந்தக்கற்கள் குறிப்பாக ஒரு மர நிழலுக்கு கொண்டு செல்லப்படும். நான்கைந்து பேர் கூடியிருந்து வேலை செய்வார்கள் உளி அவர்க ளாலேயே தயார் செய்யப்பட்டு தின மும் தோயவேண்டும். (புதிதாக்கல்) இந்த உளியை அனலில் பழுக் கக்காய்ச்சி முனையை சுத்தியலால் தட்டி கூராக்கி அந்த நுனியை ஒரு கல்லில் சிறிதளவு நீர்விட்டு அதில் குத்தி சாற்றுவார்கள். இந்த உளிதட்டும் வேலையை கம்மாலைக்குள் நடப்பது போல துருத்தி கரியடுப்பு எல்லாம் வைத்தே செய்வார்கள். என்றாலும் உளிதட்டுபவர் ஒருவர்தான். வேறு ஒருவர் தட்டினால் பதம் தப்பிப் போய் உளிகள் உடையும். வேலை செய்ய முடியாது. தினமும் இப்படி உளிதட்டும் வேலையை பல வருடங்களாக செய்தவர் அந்த அனலின் வெப்பத்தால் கண்கள் அவிந்த நிலையில் திரிகிறார். ஏன்பது மேலதிக தகவல்.

உருப்படிகளை செய்து முடித்ததும் மாலையில் அவற்றை கடையில் கொடுத்து தமக்கான வீட்டுப் பொருட்களை வாங்கு வார்கள். இங்கே கல்லடிக்கும்போது பறக் கும் கற்களை தூளாக உடைத்து சல்லிக் கல்லாக விற்பது சிறுவர் சிறுமியரும் பெண்களும் இயலாத வயோதிபர்களும் செய்வர். கொஞ்சம் பெரிதா மாங்காய் தேங்காயளவான கற்கள் சக்கைக்கல் என விற்பனையாகும். மேலும் தனியொரு வர் இந்தத் தொழிலை செய்ய இயலாது. குறைந்த பட்சம் மூவர் நால்வர் அல்லது அதற்குமேல் கூடிய குழுவே தேவை. ஒருவருக்கொருவர் ஒத்தாளையாக புரட்ட தூக்க உளிதட்ட துருத்தி ஊத என குழுத் தான் வேண்டும். அநேகமாக தந்தை மகன் மாமன் மச்சான் சகோதரர்கள் சேர்ந்து கொள்வார்கள்.

கோவில்களுக்கான சிற்பங்களுக்கும் கல்லை தோண்டி அவர்கள் கேட்கும் அளவுகளில். கிளறித்துண்டாக்கி அகில இலங்கைக்கும், ஏன் வெளிநாடுகளுக்குமே எமது சிற்ப ஆசாரிகள் சிலைகளை செய்து அனுப்புகிறார்கள். இவர்கள் பிறப்பால் ஆசாரிகள் அல்ல தொழிலால் வளர்ந்தவர் கள். ஆலயங்களுக்கான தளக்கற்கள் கோமயக்கற்களும் இவர்களது கைவண் ணமே.

**கோவில்களுக்கான சிற்பங்களுக்கும் கல்லை தோண்டி அவர்கள் கேட்கும் அளவுகளில். கிளறித்துண்டாக்கி அகில இலங்கைக்கும், ஏன் வெளிநாடுகளுக்குமே எமது சிற்ப ஆசாரிகள் சிலைகளை செய்து அனுப்புகிறார்கள். இவர்கள் பிறப்பால் ஆசாரிகள் அல்ல தொழிலால் வளர்ந்தவர்கள். ஆலயங்களுக்கான தளக்கற்கள் கோமயக்கற்களும் இவர்களது கைவண்ணமே.**

இப்போது ஏராளமான பிள்ளைகளுக்கு உரல் அம்மி திரிகைக்கல் ஆட்டுக்கல் என்பவற்றை தெரியாது. மிக்ஸி கிரைண்டர் என்பவைதான் தெரியும் ஆட்டுக்கல்லோ, அம்மியோ ஒரு போதும் பழுதடைவது கிடையாது. அதற்கு ஜார் தேவையில்லை. பொருட்களை சூடேற்றாது. இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை மாற்ற வேண் டியதில்லை.

எங்கள் பரம்பரை வீட்டில் இன்னும் எனது பூட்டி (1920) நெல்குத்திய மாவிடித்த உரல் இருக்கிறது. அதை இப்போது யாரும் பயன்படுத்துவது இல்லை. எமது கற் தொழிலாளர்களும் கோவில் வேலைகளை மட்டுமே செய்கிறார்கள் உளிகளுக்குப் பதிலாக கல்லை செப்பம் செய்ய கையில் இயங்கும் மெசின் வைத்திருக்கிறார்கள் ஆலயக்களிலும் தளக்கற்கள் இந்த கரு விகளாலேயே பொளிகிறார்கள். மனிதக் கரங்கள் வலிமையற்றுப்போனது. எமது பொருளாதாரம் இரவல்களில் வாழுது.

# சோற்றுக்கற்றாழை பயிர்செய்கை மற்றும் மருத்துவக் குணங்கள்



ஆனந்தன்
பிரேம்நாந்
லக்சி பண்ணை



உலகம்முழுவதும்ஏற்றுமதிவாய்ப்புள்ள கற்றாழை குளிர் பிரதேசங்கள் தாவி இருந்த பல்வேறு மாவட்டங்களிலும் செழிப்பாக செழிப்பாக வளரக்கூடிய தன்மை உள்ளது.

கற்றாழை. வறட்சியான பகுதிகளில் நன்றாக வளரக்கூடிய ஒரு மருத்துவ பயிராகும். ஆப்ரிக்காவை தாயகமாக கொண்ட கற்றாழை லில்லியேசி குடும்பத்தை சேர்ந்த தாவரம் ஆகும்.

கற்றாழை இலைகளிலிருந்து எடுக்கப்படும் ஜெல் எனப்படும் கூழ் சருமத்தின் ஈரப்பதத்தை பாதுகாக்கிறது. அத்தோடு கிருமி தொற்று நீக்கியாகவும் செயல்படுகின்றது. சூரிய ஒளியிலிருந்து வரும் கடும் வெப்பத்தை தரும் காமா மற்றும் எக்ஸ்ரே கதிர்வீச்சுக்களின் தீயவிளைவுகளிலிருந்து சருமத்தை பாதுகாக்கின்றது.

மேலும் சருமத்தின் ஈரத்தன்மையை பாதுகாக்கின்றது என்பதனால். வெயில் கொடுமை அதிகரிக்கும் நாடுகளில் கற்றாழைக்கு வளமான சந்தை வாய்ப்பிருக்கிறது.

செடிகளில் பூக்கள் தோன்றினாலும், இதன் மகரந்தங்கள் செயலிழந்து இருப்பதால் காய், மற்றும் விதைகள் பிடிப்பதில்லை. இதனால் பக்க கன்றுகள் மூலமாக தான் பயிர் பெருக்கம் செய்யப்படுகிறது.

மண்வளம்தரிசுமண், மணற்பாங்கான நிலம், பாறை மண் போன்றவை ஏற்றது. இதன் நீர் பெறுமானம் அதாவது மண்ணின் கார அமிலத்தன்மை 7 முதல் 8 வரை இருக்கலாம். தட்ப வெப்பநிலை வறட்சியான நிலையில், அதாவது 40 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் உள்ள பகுதிகளில் நன்றாக வளர்கிறது இதனால் தான் இலங்கையில் தலைமன்னாரின் கற்றாழை அதிகம் வளரக்கூடியதாக இருக்கின்றது. மாறாக குழிர் பிரதேசங்களில் வளர்வது மிகக் கடினமாக இருக்கும்.

பயிர் பெருக்கம் தாய்ச்செடியிலிருந்து ஒன்று அல்லது இரண்டு மாத வயதுடைய பக்க கன்றுகளை பிரித்து நடவுக்கு பயன்படுத்தலாம். ஒரே அளவுள்ள பக்க கன்றுகளை தேர்வு செய்வது முக்கியம். பக்க கன்றுகளை பிரித்ததும் அவற்றின் வேரை பஞ்சகாவ்யா அல்லது ஜீவாமிர்தம் கரைசலில் ஐந்து நிமிடத்திற்கு நனைத்த பிறகு நடலாம். இதனால் வேர் அழுகல் நோய் வராமல் தடுக்கலாம். ஒரு ஏக்கருக்கு 4



ஆயிரம் கன்றுகள் தேவைப்படும். ஜூன், ஜூலை மற்றும் அக்டோபர், செப்டம்பர் மாதங்களில் நடவு செய்யலாம்.

நிலம தயாரிப்பு நிலத்தை இரண்டு முறை உழுது ஏக்கருக்கு 4டன் தொழு உரம் இட்டு, சமன் செய்து சிறிய பாத்திகளை அமைக்க வேண்டும். செடிகள் செழிப்பாக வளர்வதற்காக செடிக்கு செடி மூன்று அடி பாத்திகளை அமைக்க வேண்டும்.

உரமிடுதல் கற்றாழை செடிகளுக்கு தொழு உரமிட்டால் சிறப்பாக வளரும். தரிசு மற்றும் சத்தற்ற மண்ணில் நட்ட 20 வது நாளில் ஏக்கருக்கு 12 கிலோ தழைச்சத்து மற்றும் 50 கிலோ ஜிப்சம் இடுவது நல்லது. சூநீர்ப்பாசனம் கற்றாழையை மானவாரிப்பயிராக பயிர் செய்வது நல்லது. ஆனாலும் பயிர் காலத்தில் வாரத்தில் ஒருமுறை கட்டாயம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

பயிர்பாதுகாப்பு கற்றாழையில் நோய் தாக்குதல் பெரும்பாலும் இல்லை. நீர் தேங்கும் நிலத்தில் அழுகல் நோய் ஏற்படலாம். வடிகால் வசதி உண்டாக்கினால் இதனை தடுக்கலாம்.

அறுவடை வணிக ரீதியாக பயிர் செய்யும் போது செடிகளை நட்ட ஆறு முதல் ஏழு மாதங்களில் அறுவடைக்கு தயாராகி விடும். இந்த நேரத்தில் இலையில் அதிக அளவு அலேயின் என்ற வேதிப்பொருள் இருக்கும். செடிகளை வேரோடு பிடுங்கி எடுத்து இலைகளை ஆறு மணி நேரத்திற்குள் கொள்வனவாளர்களுக்கு கொடுத்து விட வேண்டும்.

விளைச்சல் ஏக்கருக்கு 6 டன் கற்றாழை இலை கிடைக்கும். இலையில் 80% முதல் 90% வரை நீராக இருப்பதால் விரைவில் கெட்டு விடும். இதனால் அறுவடை செய்த உடனே இலைகளை பக்குவப்படுத்தி அவற்றிலிருந்து கூழ் படிமத்தை பிரித்தெடுத்து விட வேண்டும். சந்தைப்படுத்தி விட வேண்டும்.

### மருத்துவபயன்

1. கற்றாழை ஜெல்லை சுத்தமான நீரில் கழுவி சுத்தம் செய்து, தினமும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர உங்கள் இளமை நீண்ட நால் நிலைக்கும்,

2. சருமம் வறண்டுபோகாமல் ஈரப்பத்துடன் ஜொலிம்.

3. கற்றாழை ஜெல்லை பசு மோரில் கலந்து குடித்து வர உடல் சூட்டினால் முகத்தில் வரும் பருக்கள், வெயிலினால்தோலில் ஏற்படும் அலர்ஜி மற்றும் கருந்திட்டுக்கள்



மறைந்து போகும்.

4. இதன் ஜெல்லை முகத்தில் தேய்த்துக் கழுவி வந்தால் பளிங்கு போல் ஜொலிக்கும்.

5. கற்றாழை மடலைக் கீறி சாறெடுத்து, அதை தேங்காய்எண்ணெயுடன் கலந்து 40 நாள் வெயிலில் வைத்து இதை தலைக்கு தொடர்ந்து தேய்த்து வாருங்கள். தலைமுடி நன்குசெழித்து வளரும்,

6. காலை வெறும் வயிற்றில் சிறு துண்டுகள் தினம்சாப்பிட்டு வர உடலில் சத்து கூடும்உடல் பெருக்காமலே பலகீனம் மறையும். தாதுவிருத்தி ஏற்படும்.பிள்ளைப்பேறு வேண்டுபவர்கள்கூட இதை சாப்பிட்டுவந்தால் நாளடைவில் நல்ல முன்னேற்றம் பெறலாம்

7.சோற்றுக்கற்றாழை, வெள்ளைப் பூண்டு, பனங்கற்கண்டு, எள் எண்ணெய் ஆகியவற்றை கலந்து ஜதோராயமான அளவுகளில்ஸ காய்ச்சி வடித்து எண்ணெய் குடல் வயிறுதொடர்பான எல்லா நோய்களையும் குணப்படுத்தும் .

8. வெயில் காலத்தில் சிலருக்கு கண்களில் எரிச்சல்உண்டாகி, கண்கள் சிவந்து விடும். அப்போது, கற்றாழையின் ஒரு துண்டை எடுத்து அதன் நுங்குப் பகுதி வெளியே தெரியும்படி இரண்டாகப் பிளந்து, கண்களை மூடி கண்களின் மீது அந்தத் கற்றாழை துண்டைவைத்துக்கொண்டு சற்று நேரம் அப்படியே படுத்திருக்கவேண்டும். இப்போது கண் எரிச்சல், குறைவதோடு, சிவந்தநிறமும் மறைந்து விடும். இதை இரவு நேரங்களில் தூங்குவதற்கு முன் செய்துவந்தால் நல்ல உறக்கம் வருவதோடு, உடலுக்கு பலநன்மைகளும் கிடைக்கும்.

சிலருக்கு தூங்கி எழுந்ததும் பாதத்தின் அடியில்நெருப்பை மிதித்ததுபோல, எரிச்சலாக இருக்கும்.இதைப்போக்க இரவு படுக்கும்முன் கற்றாழையின்நுங்குபோன்ற சோற்றை பாதத்தின் அடியில் தடவிக் கொண்டு படுக்கலாம். பாத எரிச்சல் குறைவதோடு, பாதவெடிப்புகளும் குணமாகும்.

சோற்றுக் கற்றாழையில் செய்த தைலத்தை தலைக்குத்தேய்த்துக் குளிப்பதால் உடல் கூடும், எரிச்சலும் குறைந்து உடல் குளிர்ச்சியடையும், உடலில் எந்தப் பிரச்சினையும்இல்லாதவர்கள் இந்த எண்ணெய்யை தினமும் தலைக்குத்தடவி வரலாம்.

வாரம்இருமுறை இந்த எண்ணெய்யை உடலுக்குத்தேய்த்து குளிப்பதால் உடலுக்கு குளிர்ச்சியைஏற்படுவதோடு, உடல் வனப்பும் ஏற்படும். இந்த சோற்றுக்கற்றாழைத் தைலம் அல்லது எண்ணெய் நாம் வீட்டிலேயேதயாரிக்கலாம்.

செரிமான சக்தியை அதிகரிக்கும். பசியை உண்டாக்கும்.

இதுமட்டும் அல்லாமல் பெரும் ஏப்பம், பசியின்மை, குன்மம், தண்டு வலி, வயிற்றுப் பொருமல், அடிவயிறுவீக்கம், மலச் சிக்கல், நரம்புச் சூடு தணியும்.

இன்றைய அனைத்து அழகுசாதனப் பொருட்களின் தயாரிப்பிலும் தவறாது இடம் பெறுவது கற்றாழைதான். இதன் சாறு சருமத்தின் ஈரப்பதத்தை சமன் செய்வதுடன் சர்மநோய்களையும் குணப்படுத்துகிறது.

முகத்திலுள்ள கரும்புள்ளிகள், தழும்புகள், வெயில் பாதிப்புகள்உலர்ந்த சருமம் என சரும நோய் எதுவாக இருந்தாலும், சிறிதுகற்றாழைச் சாற்றைத் தினமும் தடவி வர நல்ல குணம் கிடைக்கும். இதன் சாற்றை இரவு வேளையில் முகத்தில் தேய்த்து காலையில்வெந்நீரால் கழுவ முகத்தில் உள்ள கருமை நீங்கி முகம் பொலிவுபெறும்.

தீக்காயங்களுக்கும் ‘உடனடி டாக்டர்’ கற்றாழைச் சாறுதான். நமது தோலில் நீரை விட நான்கு மடங்கு வேகமாக கற்றாழைச்சாறு ஊடுருவக் கூடியது. வைட்டமின் சி மற்றும் பிசத்துகளும் தாதுக்களும் நிறைந்தது இச்சாறு. சருமத்திலுள்ள கொலாஜன் எனப்படும் கொழுப்பு சத்தை குறைக்கக்கூடிய புரோட்டீன் கற்றாழையில் அதிகம் காணப்படுவதால் முகத்திலுள்ள சுருக்கம் வயோதிக தோற்றத்தை குணப்படுத்துகிறது.

ஆண்கள் சவரம் செய்யும் பொழுது ஏற்படும் கீறல்கள்காயங்களுக்கும் உடனடி நிவாரணம் பெற கற்றாழைச் சாறை பயன்படுத்தலாம்.

கேசப் பராமரிப்பில் தலைக்கு கருப்பிடவும் கேசத்தின்வளர்ச்சியைத் தூண்டவும் பயன்படுகிறது. தலையில் ஏற்படும் கேசப் பிரச்சினைகள் மற்றும் பொடுகை நீக்குகிறது. தோல் இறுக்கத்திற்கு சுகமளிக்கும் மருந் தாகிறது. சோற்றுக் கற்றாழை சோற்றை எடுத்து எண்ணெயிலிட்டுக் காய்ச்சித்தலை முழுகி வர மயிர் வளர்வதுடன் நல்ல தூக்கமும் உண்டாகும்.



## கால்நடை வளர்ப்பில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் - 01

# கால்நடைகளில் குடற்புழுக்களால் ஏற்படும் இழப்புகளும் தீர்வுகளும்



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

இலங்கையின் பாலுற்பத்திக் குறைவில், கால்நடைகளில் ஏற்படும் குடற் புழுக்களின் தாக்கம் முக்கிய பங்கை வகிக்கிறது. குடற்புழுக்கள் கால்நடைகளின் குடல், இரப்பை போன்ற உறுப்புகளில் இருந்து கொண்டு ஊட்டச்சத்துகளையும் இரத்தத்தையும் உறிஞ்சுவதுடன் ஏராளமான நோய்கள் ஏற்படுவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துகின்றன. இவற்றைத் அழிக்கும் முறையான நீக்க மருந்துகளை எமது பண்ணையாளர்கள் வழங்குவதில்லை. குடற்புழு நீக்கம் என்னும் மிக முக்கியமான முகாமைத்துவ நடவடிக்கையை புறக்கணிப்பதால் பல கால்நடைகள் உற்பத்தி மட்டத்தில் குறைவடைவதுடன் கணிசமான அளவில் இறந்தும் போகின்றன.

கால்நடை உற்பத்தியில் முன்னணியில் உள்ள பல நாடுகளில் இந்த குடற்புழு நீக்கம் தொடர்பாக பல முக்கியமான ஆய்வுகள் செய்யப்பட்டு காலத்துக்கு ஏற்ப முறையான மருத்துவ முறைகள், உணவூட்டல் மற்றும் ஏனைய முகாமைத்துவ முறைகளை மேம்படுத்தி குடற்புழுத் தாகத்தில் இருந்து தமது கால்நடைகளின் இழப்பை குறைகின்றனர். இந்த கட்டுரை குடற்புழுகளின் தாக்கம் அவற்றின் பொருளாதாரம் மற்றும் அவற்றை கட்டுப்படுத்துதல் போன்றவற்றை ஆராய்கிறது.


ஒவ்வொரு வருடமும் மாரி மழையின் பின்னரான காலப்பகுதியில் ஆடு, மாடு எருமை போன்ற கால்நடைகளில் கடும் வயிற்றோட்டம் மற்றும் பலவீனமான உடல் நிலையை அவதானிக்க முடியும். இது பெரும்பாலும் குடற்புழுகளின் தாக்கத்தின் காரணமாகவே ஏற்படுகிறது. (இங்கு நான் குடற்புழு குறிப்பிடுவது வட்டப் புழுக்கள் [round worms], கொக்கிப் புழுக்கள் ஜறாணி றழசஅஸ, நாடாப் புழுக்கள் [tape worms], தட்டைப் புழுக்கள் [flat worms] போன்ற அக ஒட்டுண்ணிகளையே]

கால்நடைகளில் மேற்படி குடற்புழுத் தாக்கம் வருடம் முழுவதும் காணப்படுகின்ற பொழுதிலும் மழைக்காலத்தின் பின்னரான காலப்பகுதியில் தான் அதிக அளவு அவதானிக்கப்படுகிறது. மழைக் காலத்தில் நிலவும் ஈரலிப்பான சூழல் குடற்புழுக்கள் பெருகுவதற்க்கு சாதகமானது என்பதுடன் குடற்புழுகளின் வாழ்க்கை வட்டம் பூர்த்தி யாகக் கூடிய இடை நிலைக் காவிகளான [intermediate host] நத்தைகளின் பெருக்கமும் நிகழும் காலம் என்பதாலும் மழைக்கு பின்னரான மாதங்களில் அதிகளவில் குடற்புழு நோய் தாக்கத்தையும் இழப்புகளையும் அவதானிக்க முடிகிறது.

குடற்புழு தாக்கத்தின் அறிகுறிகள்

- கால்நடைகளின் உடல் கடுமையாக மெலிவடையும்
- வயிறு பானை போல திரவம் நிறைந்து காணப்படும் [Ascitis]







• உரோமம் சிலிர்த்து காணப்படும். சிலவேளைகளில் உரோமம் வரண்டும் காணப்படும்

• கழுத்துப் பகுதி வீங்கியது போல காணப்படும். இதனை தந்தம் வீங்கியது என்றும் சொல்வார்கள் [bottle jaw]

• கால்நடைகளின் கண் மடல், முரசு பகுதிகள் வெளிறிய இரத்தச் சோகை நிலமை அவதானிக்கப்படும் [Anemia]

• கழிச்சல் அவதானிக்கப்படும். சில வேளைகளில் இரத்தத்துடன் கூடியதான கழிச்சலை காண முடியும். தொடர்ச்சியான கழிச்சல் காரணமாக கால்நடைகளின் பின்புறம் எப்போதுமே ஈரமாகவும் சாணம்/புழுக்கை ஒட்டியபடி இருக்கும். ஆடுகளில் புழுக்கை சாணம் போலவும், கழிச்சலாக வும் காணப்படும்.

• தொடர்ச்சியான கழிச்சல் மற்றும் இரத்த சோகை காரணமாக கால்நடைகள் பலவீனமாகி விழுந்தும காணப்படும்

• இறுதி விளைவாக இறப்பு நிகழும். அதிகளவில் இளம் பராயத்து விலங்குக ளில் இறப்பு அதிகளவில் நிகழும்.

பொதுவாக கழிச்சல் காரணமாக நீர்ச் சத்து மற்றும் கனியுப்புக்களின் இழப்பு ஏற் படுகிறது. இதன் காரணமாக கால்நடைகள் இறக்கின்றன.

சிலவகை புழுக்கள் தமது கொக்கி போன்ற உறுப்பினால் கடித்து இரத்தத்தை அதிகளவில் உறிஞ்சுவதன் காரணமாக இரத்தசோகை நிலைமை ஏற்படுகிறது.

குடல் போன்ற உறுப்புகளில் கடிப்பதன் காரணமாகவும் நச்சுப் பொருட்களை சுரப் பதன் காரணமாகவும் கடி காயங்களில் ஏற்படுகின்ற இரண்டாம் நிலை நுண்ண யிர்களின் தொற்று காரணமாகவும் கால் நடைகளில் கழிச்சல் நிலைமை ஏற்படு கின்றது. இந்த காரணிகளை ஒன்று சேர்த்து அழிக்காத வரையில் மேற்படி கழிச்சல் நிலை தொடர்வதோடு விலங்குகள் பாதிப்படைகின்றன.

பல இடங்களில் சிகிச்சைகள் வெறு மனே ஒரு காரணியை மாத்திரம் கருதி வழங்கப் படுவதால் குடற்புழு தாக்கத்தின் கழிச்சல் இலகுவில் குணமடைவதில்லை. குடற்புழு தாக்கத்தால் கடுமையாக பாதிக்கப் பட்ட கால்நடைகளை மீட்டெடுக்க கடுமை யான சிகிச்சை தேவை. அதற்கு அதிக செலவும் மினக்கடலும் அவசியம்.

சில புழுக்கள் நுரையீரலை தாக்கு கின்றன. இவற்றின் தாக்கம் காரணமாக கால்நடைகள் இருமும், சளி போன்ற திர வங்கள் வடியும். சுவாசிக்க சிரமப் படும். இவற்றின் நீட்சியாக நியுமோனியா நிலை தோன்றி இறப்பு வரை செல்லக் கூடும். சில புழுக்கள் கால்களைத் துளைத்துக் கொண்டு சென்று அரிப்பு நிலையை தோற்றுவிக்கும். சில புழுக்கள் கால்நடை களின் கண் பகுதிக்குள் பாதிப்பை தர வல்லன. மேலும் கால்நடைகளில் ஏற்படும் சில குடற்புழு க்கள் மனிதனையும் பாதித்து நோய்களை ஏற்படுத்தக்கூடியன. அதா வது கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்வது அவற்றை மாத்திரமல்ல அவற் றுடன் தொடர்புடைய மனிதர்களின் ஆரோக் கியத்துக்கும் முக்கியமான நடவடிக்கையா கும்.

குடற்புழுத் தாக்கத்தின் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற எதிர்மறை விளைவுகள்

• கால்நடைகளை உற்பத்தித்திறன் பாதிக்கப்படுகிறது [productivity]

• உணவு உட்கொள்ளுகின்ற ஆற்றல் குறைவடைகின்றது.

• உணவு மாற்றுத்திறன் குறை வடைகிறது. [Feed conversion ratio] கால் நடைகளில் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது அதாவது வயதுக்கு ஏற்ற வளர்ச்சி இருக்காது.

• கால்நடைகளின் இனப்பெருக்க ஆற்றல் பாதிக்கப்படும் குறிப்பாக சினை வேட்கைக்கு வருகின்ற அளவு குறைவ டையும் . வேட்கை அறிகுறிகளை [Heat signs] தெளிவாக அவதானிக்க முடியாத நிலை தோன்றுகிறது. மேலும் குடற்புழு தாக்கம் காரணமாக கால்நடைகள் சினைக்கு வருவதும் சினைப்படுதலும் குறைவடையும்

• சில புழுக்கள் குடலில் முடிச்சுக்களை [pimply gut] ஏற்படுத்தி உணவு அகத் துறிஞ்சலை பாதிக்கின்றன. முக்கிய சுரப்புகளை சுரக்கும் இரப்பைப் கலங்கள் பாதிப்படைவதால் அவை சுரக்கும் அவசி யமான சுரப்புகள் குறைவடைந்து உணவு செரிமானமும் பாதிக்கப்படுகிறது.

• தொடர்ச்சியான குடற்புழு தாக்கக் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி [immune suppression] குறைவடைந்து பல்வேறு நோய்களுக்கு இந்த கால்நடைகள் உட்படுகின்றன.

கால்நடைகளுக்கு குடற்புழுத் தாக்கம் எப்படி ஏற்படுகிறது? என்பதையிட்டு அடுத்த வாரம் பார்ப்போம்.





# வேலையில் பெண்கள் வெற்றி பெற்றுக்கொள்ள வேண்டுமா?

**- காலா ஜாக்சன் -**



பணியிடத்தில் பெண்கள் வெற்றிகரமாகத் திகழ்வது எப்படி..? 'கரேஜ், கிளாரிட்டி ஏ கான்ஃபிடன்ஸ்' (Courage, Clarity, and Confidence) என்னும் புத்தகம் பெண்களுக்கு வித்தியாசமான வெற்றி அணுகுமுறைகளைச் சொல்லித் தருவதாக உள்ளது. மாரச் 8 சர்வதேச மகளிர் தினம். இந்த வாரம் முழுவதும் பெண்களுடைய சமத்துவம், முன்னேற்றம் போன்வறை குறித்து பேசப்படுவதால், இந்த நூலிலுள்ள முக்கியமான சில விடயங்களை நாங்களும் எமது வாசகர்களுடன், குறிப்பாக பெண் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.

அமெரிக்காவில் வசிக்கும் எக்சிக்யூட்டிவ் கரியர் மற்றும் லீடர்ஷிப் டெவலப்மென்ட் பயிற்சியாளர் காலா ஜாக்சன் (Gala Jackson) எழுதிய புத்தகம் இது. தன் வாழ்க்கை அனுபவங்களைச் சேர்த்து இந்தப் புத்தகத்தை எழுதி யுள்ளார் அவர்.

### வாழ்க்கையை மாற்றிய புத்தகம்

"இந்தப் புத்தகத்தை எழுதும்போது என்னுடைய வாழ்க்கையில் எது வெற்றி என்பதை நான் மறுவரையறை செய்து கொள்ள வேண்டியிருந்தது. அப்படி என்னென்ன நடந்தது என்கிறீர்களா..?

எனக்குத் திருமணமானது. எனக்குப் பரிச்சயம் இல்லாத ஒரு கலாசாரம் நிலவும் இடத்துக்கு நான் செல்ல வேண்டியிருந்தது. வாழ்க்கை சுபமாகப் போய்க்கொண்டிருந்தபோது தொடர்ந்து வந்த சோதனைகள் பல.

என் தந்தை ஓர் அரிய வகை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, நோயைக் கண்டறிந்த இரண்டு வாரங்களிலேயே இறந்து போனார். என் சிறந்த தோழி ஒருவர் ஒரு கார் விபத்தில் இறந்து போனாள். இதற்கிடையில் 15 வருடங் களாக என்னுடன் இருந்த என்னுடைய செல்ல நாய் இறந்து போனது.

என் பிறந்த நாளன்று நான் பணிபுரிந்த நிறுவனத்தில் இருந்து என்னை ஆள் குறைப்பு காரணமாக வேலையை விட்டு நீக்கினார்கள். எனக்கு மிகவும் பிடித்த வேலை. தவிர, வேலையில் இருந்து, நான் நீக்கப்பட இரு வாரத்துக்கு முன்புதான் என்னுடைய முகதமையாளரிடம் நான் கர்ப்பமாக இருக்கும் தகவலை சொல்லியிருந்தேன். திடீரென பணி நீக்கம் என்றதும் தலைசுற்றியது. குடும்பத்தின் நிதித் திட்டங்கள் எல்லாம் சிதைந்தன. கவலையுடன் நாள்களை நகர்த்தினேன்.

திடீரென பிரசவ வலி உருவாகி பிரசவக் காலத்துக்கு சற்று முன்பே வேறு வழியில்லாமல் சிசேரியன் மூலம் என் மகனைப் பெற்றெடுத்தேன். ஒன்பது வாரங்கள் சிறார்களுக்கான ஐ.சி.யு-வில் இருந்தபின், மகனை வீட்டுக்கு எடுத்துச் சென்றேன். மருத்துவர்கள் அவனை ஒரு "மெடிக்கல் மிராக்கிள்" என்றார்கள். என் மகன்தான் வாழ்வில் எப்போது வேண்டும் என்றாலும் மிராக்கிள் - அதிசயம் நடந்துவிடும் என்பதை நினைவூட்டும் ஆளாக இருக்கிறான்.

இந்தப் புத்தகத்தை எழுத ஆரம்பித்த பிறகு எத்தனை முறை நான் தைரியம் இல்லாமல் போனேன் என்று எனக்கே தெரியாது. ஆனால், புத்தகத்தின் தலைப்பு தைரியம், தெளிவு மற்றும் நம்பிக்கை. இது என்னிடத்தில் பல சமயம் எள்ளளவும் இல்லாமல் போயிருந்தது. எது என்னை மீண்டு எழ வைத்தது, நான் கவனித்த, விழிப்புணர்வு பெற்ற, ஆராய்ந்தறிந்த விஷயங்கள் என்னென்ன, 100 சதவிகித வீழ்ச்சியைக் கண்ட நான் மீண்டெழுந்தது எப்படி, எந்த நடைமுறையின் மூலம் நான் மீண்டெழுந்தேன் என்பதைத்தான் இந்தப் புத்தகத்தில் கூறியுள்ளேன்" என்று ஆரம்பிக்கிறார் புத்தகத்தின் ஆசிரியர் காலா ஜாக்சன்.

மாறிய சூழலுக்கேற்ப இந்தப் புத்தகத்தின் ஆசிரியர், வேலை மற்றும் ஏனைய நடவடிக்கைகளை எப்படி மாற்றிக்கொண்டார், இதற்கு தேவையான தைரியம், தெளிவு மற்றும் நம்பிக்கையை எப்படிப் பெற்றார் என்பதை எல்லாம் விளக்கமாக இந்தப் புத்தகத்தில் கூறியுள்ளார். அந்த விஷயங்கள் என்னென்ன என்று பார்ப்போம்.

சம்பளம் குறைவு

பதவி உயர்வு இல்லை

"இன்றைக்கு, ஆண்கள் சம்பளத்தோடு ஒப்பிட்டால், 80 சதவிகிதமே பெண்ணுக்குக் கிடைக்கிறது. அம்மாவாகி மகப்பேறுக்கு விடுப்பில் சென்றோ, வேலையை விட்டு நின்றோ மறுபடியும் வேலைக்குச் சென்றால், அது 71% என்கிற அளவுக்குக் குறைந்து போகிறது. அடிப்படையில் நாமே குடும்பத் துக்குப் பொறுப்பு என்ற எதிர்பார்ப்பு மேலோங்கி இருக்கிறது. இதுவும் பணியிடத்தில் நம்மை நயந்து போகச் செய்கிறது. நிர்வாகம் நமக்குத் தேவையான முழு ஒத்துழைப்பைத் தராது.

வேலையில் கில்லியாக இருந்தாலும் புரொமோஷன் என்று வந்தால் அது நமக்கில்லை. களத்தில் செயல்படும் நமக்கு புரொமோஷன் தராததால், நிர்வாகத்துக்கு எவ்வளவு நஷ்டம் என்பதைக் கணக்கிட ஆளில்லை. பல சந்திப்புகளில் நம் பேச்சு புறக்கணிக்கப்படும். வெளிப்படையான மற்றும் மறைமுகமான தொல்லைகளுக்கு ஆளாவோம். இவை எல்லாவற்றையும் புன்முறுவலுடன் சகித்துக்கொண்டு வேலையை மட்டும் வண்டி வண்டியாகச் செய்துமுடிக்க வேண்டியிருக்கும்.

எல்லாப் பெண்களுக்குமே தான் எந்த மாதிரியான ஒரு பெண்ணாக ஆக வேண்டும் என்ற ஒரு கனவு உண்டு. பொதுவாக, வலிமை மிகுந்த, துணிச்சலான, பயமேயில்லாத, கிரியேட்டிவ்வான, படைப்பாற்றல் மிகுந்த மற்றும் தான் நினைக்கும் அளவுக்கு உண்மையான வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற கனவே பெரும்பாலான பெண்களுக்கு இருக்கிறது. இதை

மனதில் பூட்டிவைத்துக் கொண்டு பெண்களாகிய நாம் அன்றாட வாழ்வில் இயங்கிக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால், சூழல் அப்படி இருக்கிறது.

சூழல் முழுமையாக நம்மை முடக்கிப் போட்டு விடும். இதை விட்டுவெளியே வருவதற்கு நமக்குத் தெளிவு வேண்டும். தெளிவு என்பது இருந்தால்தான் நமக்கு நம்பிக்கை உருவாகும். தெளிவு என்பது தான் என்ன நிலையில் இருக்கிறோம் என்பதை விட்டுவிட்டு, என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து சிந்திக்க வைக்கும்.

### தெளிவும் தைரியமும் வேண்டும்

நான் யார், எது எனக்கு மிக மிக முக்கியம், எப்படி என்னுடைய திறமையை உபயோகித்து முன்னேறுவது, எப்படி நாம் நினைக்கும் ரீதியிலான வாழ்க்கையை வாழ்வது... இவற்றில் பெண்களுக்குத் தெளிவு நிச்சயமாக வேண்டும். இதற்காக என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்த பின்னால் மட்டுமே நமக்கு கிடைத்த வாழ்க்கையை வாழ்வதற்குப் பதில், நமக்குப் பிடித்த வாழ்க்கையை வாழ்வதற்கான தைரியம் உருவாகும்.

பெண்களுக்கு ஏன் தைரியம் இல்லாமல் போகிறது? காரணம், ரெசிஸ்டென்ஸ் எனும் சுய எதிர்ப்பாகும். இந்த சுய எதிர்ப்பு வந்து விட்டால், ஒருவேலையைச் செய்ய சாதாரண மாகத் தேவைப்படும் நேரத்தை விட மூன்று நான்கு மடங்கு எடுத்துக் கொள்வோம். மின்னஞ்சல்களை குவிய விட்டு கண்டு கொள்ளாமல் இருப்பது, அலுவலகக் கூட்டங்களில் கவனம் இல்லாமல் அனைவரையும் வேடிக்கை மட்டுமே பார்ப்பது, கவனச் சிதறலுக்கு சுலபமாக ஆளாவது, எல்லாவற்றையும் தள்ளிப் போடுவது... இப்படி பலவற்றைச் சொல்லலாம். எப்போது இது நடக்கிறது எனில், 'பெரிய பிரயோஜனம் ஒன்றும் இல்லை' என்கிற மனநிலைக்கு வந்தபிறகு மட்டுமே.

பார்க்கும் வேலையில் அர்த்தமில்லாதது போல் தோன்ற ஆரம்பிக்கும். பணியிடத்தில் இதற்கு நான்கு விஷயங்கள் காரணமாக உள்ளன. அவை, வேலை, கலாசாரம், பணியின் தன்மை மற்றும் உங்களுடைய மேலாளர்!

நாள்பட நாள்பட பகல் கனவு காண ஆரம் பிப்பீர்கள். அர்த்தமுள்ள வேலை, சுதந்திரம், தேவையான அளவு பணம் மற்றும் பண ரீதியான சுதந்திரம், மகிழ்ச்சி என ஏங்க ஆரம்பிப்பீர்கள். பயம் உங்களுடைய ஆழ்மனதைக் கவ்வியிருக்கும். இங்கேதான் உங்களுக்குத் தேவை தைரியம். இதில் தைரியம் என்பது இருக்கும் சூழலைத் தாங்கிக்கொண்டு புதிய விஷயங்களில் ஈடுபட்டு, தளராது முயற்சி செய்து, அவ்வாறு முயலும்போது எதிர் கொள்ளும் கஷ்டநஷ்டங்களைத் தாங்கிக் கொள்வதற்கான மனரீதியான வலிமையே யாகும். தைரியமே சூழலைப் புரிந்துகொண்டு ரிஸ்க்குகளை எடுக்கவும் அந்தச் செயலில் தொடர்ந்து ஆர்வமுடன் இருக்கவும் உதவும்.

தைரியமே நம்மை ரிஸ்க் எடுக்க வைக்கும். தைரியமே வேண்டாத விஷயங்களை 'முடியாது' என்று சொல்ல வைக்கும். தைரியமே 'இந்த வேலை இல்லாவிட்டால் இன்னொரு வேலை... இந்த டிப்பார்ட்மென்ட் இல்லா விட்டால் இன்னொரு டிப்பார்ட் மென்ட்' என்று நினைக்க வைக்கும்.

### தேவை ஓர் ஒப்புதல் சீட்டு

இதற்கு முதலில் நமக்கு நாமே ஓர் ஒப்புதல் சீட்டைத் தர வேண்டும். எப்படி பேசுகிறோம் என்பதை நிர்ணயித்துக் கொள்ள, எது வேண்டும் என்று கேட்டுப் பெற, புதியதாய் பலவற்றை முயன்று பார்க்க எனப் பலவற்றுக்கும் நாமே நமக்கு அனுமதி சீட்டை வழங்கிக்கொண்டு, அது இருக்கும் தைரியத்தில் அடித்து ஆட வேண்டும். ஒப்புதல் சீட்டு என்னும் நடைமுறை விளையாட் டாகத் தெரிந்தாலும் அது பல அற்புதங்களை நிகழ்த்தவல்லது. இந்த வித அனுமதி சீட்டே பல விஷயங்களை முயன்று பார்க்கத் தூண்டுகோலாக இருக்கும்.

அடுத்தபடியாக, நமக்கு என்ன வேண்டும் என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். தெளிவு என்பது ஒரு "சூப்பர்பவர்" விஷயம். அதுதான் நம்பிக்கையின் பிறப்பிடம். தெளிவாக இல்லாவிட்டால், தேவை இல்லாத இடத்தில் தேவை இல்லாமல் கவலைபட்டு, எரிச்சலடைந்து நம்மை நாமே அழுத்தத்துக்கு ஆளாக்கிக் கொள்வோம். சுலபத்தில் தெளிவு வந்து விடாது. எரிச்சல் மற்றும் உணர்வுகளின் கொந்தளிப்பு இவற்றை எல்லாம் கடந்த பிறகே தெளிவு பிறக்கும்.

மனதில் தெளிவு பிறக்க பின்வரும் சில படிநிலைகளை கடைப்பிடிக்க வேண்டும். நமக்கு எது இனிமேல் சரிவராது என்பதைத் தெளிவாக ஒப்புக்கொள்ள வேண்டும். உதாரணமாக, 'இந்த மேலாளுடன் இனி வேலை செய்ய முடியாது. என் நிர்வாகத்திடம் எல்லா வேலையையும் ஒப்புக் கொண்டுவிட்டு என்னை பாடாய்ப் படுத்து கிறார். நாளின் இறுதியில் செல்லாக்காசு போல உணரும் சூழலில் நான் இனி இருக்க மாட்டேன்' என்று முடிவு செய்வது ஆகும்.

நம் பலம் என்ன என்பதை நாம் தெளிவாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'மற்றவர்கள் செய்வதைவிட நான் எந்தெந்த விஷயங்களை சிறப்பாகச் செய்கிறேன், என்னை எந்த விஷயத்தில் எல்லோரும் மெச்சு கின்றனர், எது எனக்கு இயல்பாக வருகிறது' போன்றவை இதற்கான உதாரணங்கள் ஆகும்.

அடுத்தபடியாக, நம் கடந்த கால அனுபவத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். உதாரணமாக, பல்வேறு நிறுவனத்தில் பார்த்த எந்தெந்த வேலைகள் உங்களுக்கு மிகவும் பிடித்தமாக இருந்தன, எது பிடிக்கவே இல்லை, எதை நீங்கள் மறுபடியும் செய்யவே மாட்டீர்கள், எந்த பிரச்சினைகளை உங்களால் தீர்க்க முடியும், எவற்றை உங்களால் தீர்க்கவே முடியாது, எது மீண்டும் உங்களுக்குக் கிடைத்தால், தாவிச் சென்று எடுத்துக் கொள்வீர்கள் என நீங்கள் முடிவு செய்ய வேண்டும்.

உங்கள் முன்னேற்றத்துக்குத் தடை போடும் எதிர்மறை சிந்தனைகள் மனதில் எழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் வளர்ச்சிக்கு அவசியமாகத் தேவைப்படுகின்ற திறன்களை உங்கள் மனம் உங்களுக்குச் சுட்டிக்காட்டும். அவற்றைப் புறம்தள்ளி விடாமல், வளர்த்தெடுக்க முயலவேண்டும். அப்படிச் செய்யும் போது நீங்கள் வலுவான, அதிக துணிச்சலான, மிகவும் தைரியமான நபராக உருவெடுக்க முடியும்" என முடிக்கிறார் ஆசிரியர்.

சிறப்பான நடைமுறை ஒன்றை உருவாக்கி, அதன்படி வாழ்ந்துகாட்டி வெற்றியும் பெற்று உள்ள ஆசிரியர் சொல்லும் கருத்துகளை, அனைத்துப் பெண்களுமே கடைப்பிடித்தால், பணியிடத்தில் வெற்றிகரமாகச் செயல்பட்டு சாதனைகளைப் புரியலாம்!

**என் பிறந்த நாளன்று நான் பணிபுரிந்த நிறுவனத்தில் இருந்து என்னை வேலையை விட்டு நீக்கினார்கள். எனக்கு மிகவும் பிடித்த வேலை. தவிர, வேலையில் இருந்து, நான் நீக்கப்பட இரு வாரத்துக்கு முன்புதான் என்னுடைய முகதமையாளரிடம் நான் கர்ப்பமாக இருக்கும் தகவலை சொல்லியிருந்தேன். திடீரென பணி நீக்கம் என்றதும் தலைசுற்றியது. குடும்பத்தின் நிதித் திட்டங்கள் எல்லாம் சிதைந்தன.**

# மரமும் மனமும்



எமது திருவள்ளுவப் பெருந்தகை

அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்

மக்கட் பண்பு இல்லாதவர். என்றார்.

அப்படியானால் இயற்கையைப் பாது காத்து மிகவும் வசதியான வாழ்க்கையைத் தரும் மரங்களை நாம் நட வேண்டும். இருக்கும் மரங்களைப் பாதுகாக்க வேண் டும்.

அரசாங்கம், அரசசார்பற்ற நிறுவனங் கள் மரம் நடுவதற்கு ஒதுக்கும் பணம்,மரம் நடுகைத் திட்டங்கள் வெற்றிகரமாக நடை முறைப்படுத்தப்படுவதில்லை என்ற குற் றச்சாட்டு உண்டு.

அப்படியானால் பசுமையைப் பாதுகாத்து இயற்கையை நேசிக்கும் தன்னலம் கருதாத மனிதர்களது மரம் நடுகையை நாம் ஆத ரிக்க வேண்டும்.

மரம் நடுவதற்கு ஊக்குவிக்கா விட்டா லும் பரவாயில்லை. நட்ட மரங்களை அழிக்கும் பாதகச் செயல் செய்யக் கூடாது.

வளர்கின்ற மரங்களைக் கூட்டுடன் சேர்த்து எரிக்கின்ற பாதகம் ஆங்காங்கே தொடருகின்றது. இது எமது இடம் நாம் தான் இங்கு சேவை செய்வோம். மற்றை யவர்கள் வரக் கூடாது என்ற மனப் பாங்கு கூடாதது.

யார் குற்றினாலும் அரிசி ஆகினால் சரி என்ற பொது நோக்கம் எமக்குத் தேவை.

இனவாதம், மதவாதம், மொழிவாதம், சாதிபேதவாதம், பிரதேசவாதம், பிரதேச குறிச்சி வாதம் போன்றவை தான் எமது வளமான அழகான தாய்த் திருநாட்டின் அழிவுக்குக் காரணமாகும்.

நாடு சுதந்திரம் அடைந்து 75 வருடங் களைக் கடந்தோம். ஆனால் பிரிவினை யில் தான் நிற்கின்றோம்.

குறுகிய நோக்குடன் குறுகிய இலாபத் தைப் பெறுவதற்காக மக்களைத் திசை திருப்புவது என்பது தவறான ஒன்று.

மரங்களை, மரக் கூடுகளை அழிப்ப வர்களைப் பார்த்தால் 16 வயது முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்களாகத் தான் இருப் பார்கள். அதிலும் 16 வயது முதல் 25 வயது வரையானோரே இப் பாவச் செய லைச் செய்திருப்பார்கள்.

கொத்து, புரியாணி, பிறைட் ரைஸ், கொக்கோ கோலா, குடி கூத்து என அற்பச் சலுகைகளுக்கு ஆசைப்பட்டே இந்த ஈனச் செயலைச் செய்திருப்பார்கள்.

பாவம் எது, புண்ணியம் எதுவெனப் பிரித்தறியத் தெரியாத பருவம். மூத்தோர் சொல்லைத் தேவாமிர்தமாகக் கொள்ளத் தெரியாத அறியாமைப் பருவம்.

செய்த நல்வினைகளின் பயன் எப்படி இருக்கும்?

தீவினைப் பயன்கள் எப்படி இருக்கும்?

என்பதைப் பகுத்து ஆராயத் தெரியாத பருவம்.

மூத்தோர் வழிகாட்டலை ஏற்கத் தெரியாத பருவம்.

சின்னத்திரைகளில் தொடர்நாடகங் களுக்கு வசப்பட்டுக் கோயில்களில் திரு விழாக் காலத்தில், விசேட பண்டிகைக் காலத்தில் ஆன்மீகச் சொற்பொழிவை நிறுத்திய போது இந்தச் சமூகத்துக்குச் சனியன் பிடித்தது.

அதன் விளைவு தான் சமூக விரோதச் செயல்களின் பெருக்கம்.

நாம் வாழும் பூமி நமதென்று கொண் டாடுவோம். நமக்காக நடும் மரங்களைப் பேணுவோம்.

நாமும் நிறையவே மரங்களை நடு வோம்.

இயற்கையை நாம் அழித்தால் இயற் கையால் நாம் அழிவோமென்ற பேருண் மையைத் தெரிவோம்.

மரங்களைப் பாதுகாக்கும் மகத்தான மனிதர்களாக வாழ்வோம்.

**வளர்கின்ற மரங்களைக் கூட்டுடன் சேர்த்து எரிக்கின்ற பாதகம் ஆங்காங்கே தொடருகின்றது. இது எமது இடம் நாம் தான் இங்கு சேவை செய்வோம். மற்றையவர்கள் வரக் கூடாது என்ற மனப் பாங்கு கூடாதது. யார் குற்றினாலும் அரிசி ஆகினால் சரி என்ற பொது நோக்கம் எமக்குத் தேவை.**



வேதநாயகம் தபேந்திரன்

# எங்கட ஆச்சி



**- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -**

ஒரு மனுசனுக்கு கவலை துன்பம் துயரம் கூடக்கூட அவன்ரை மனப்பாரம் கூடும்.

இப்பிடி மனப்பாரம் கூடக்கூட மன அழுத்தம் கூடி கண்ட கிண்ட வாதை வருத்தங்களும் வரும் எண்டுவா எங்கட அன்னம்மாக் குஞ்சாச்சி.

அதால மனுசன் தன்ரை மனப்பாரத்தை இறக்க வேணும் சுகமாக வாழவேணும் எண்டு போட்டுத்தான் எங்கட ஆக்கள் ஊர்வழிய கோயிலைக் கட்டினவை. அதுமாதிரி அந்தச்சாமி இந்தச்சாமி எண்டு நிறையச் சாமியளை அறிமுகப்படுத்தி அந்தவிரதம் இந்த விரதம் எண்டு விரதங்களை அறிமுகப்படுத்தி உதோட கோயில்வழியை நிறையத் திருவிழாக்களை உண்டாக்கி சனம் எப்பிடி எண்டான்னா ஒண்டு கூட வழிபாடு செய்ய உறவாட வழி செய்தவை எண்டுவார் குஞ்சப்பு.




உண்ணான இப்பிடித் திருவிழாக்களைச் செய்யேக்கை ஆடல் பாடல் எண்டு கலைகளையும் சேர்த்துவைச்சவை. இப்பிடிக் கோயில் திருவிழாக்கள் ஆன்மீகத்துக்கு எண்டு மட்டும் இல்லாமல் கலைகள் வளருகிற இடங்களாகவும் இருக்கின்றன. இப்பிடியான திருவிழாக்களைச் செய்யிற தில ஆன்மீகக் காரணங்கள் மட்டும் இல்லை அதுக்குள்ளை உளவியல், சமூகவியல், பண்பாட்டியல், பொருளியல், அரசியல் காரணங்களும் கலந்து கிடக்கெண்டுவார் எங்கட அப்பு.

மனுசர் ஒண்டு கூடிக் கும்பிடுறதாலை தங்கட கவலையை கடவுளிட்டை மட்டும் இல்லை தங்களுக்குத் தெரிஞ்சவைக்கும் சொல்லி மனப்பாரத்தைக் குறைச்சு ஆறுதல் அடைவினம்.

அதோட தங்கட சொந்த பந்தங்கள் தெரிஞ்சவை சிநேகிதர் எல்லாரையும் கண்டு கதைச்சு தங்கட உறவுகளைப் புதுப்பிப்பினம்.

அங்க நடக்கிற கலைநிகழ்ச்சியள் கச்சேரியளைப் பாத்து மனம் சந்தோசப்படுவினம். உதாலை அவையிட்டை இருக்கிற கவலையள் துயரங்கள் துன்பங்கள் மறைஞ்சு போடும் இல்லாட்டில் குறைஞ்சு போடும் எண்டுவா ஆச்சி .

அது மட்டும் இல்லாமல் திருவிழாவிலை கச்சேரி செய்யிறவை, கலை நிகழ்ச்சி செய்யிறவை, மேளகாறர், சாத்துப்படி காறர், மடப்பள்ளிகாறர், ஐயர், பண்டாரம், எடுபிடி வேலை செய்யிறபலவேலையாக்கள், கோயிலுக்குத் திருவிழாக்களுக்கு சாமான் குடுக்கிறவை, திருவிழாவில சாமான்கள் விக்கிறவை, வண்டி வாகனம் ஓடுறவை எண்டு எல்லாருக்கும் நல்ல வருமானம் கிடைக்கும்.

அதோட திருவிழாவோடை கோயிலைத் திருத்த எண்டு வர்ணம் பூச எண்டு வெளிக்கிடுகிற படியாலை மேசன் வேலை செய்யிறவை ,தச்சு வேலை செய்யிறவை, சிற்ப வேலை செய்யிறவை, இரும்பு வேலை செய்யிறவை, வர்ண வேலை செய்யிறவை எண்டு ஊரிப்பட்ட ஆக்களுக்கு வருமானம் வாறபடியாலை அந்தக் குடும்பங்கள் சந்தோசமா இருக்குங்கள் கண்டியோ எண்டுவா எங்கட ஆச்சி .

அதோட திருவிழாக்காலத்திலை அன்னதானம் நடக்கிறதாலை இல்லாததுகள் செல்லாததுகளின்ரை வயிறும் நிறையும் எண்ட படியாலை அதுகள் சந்தோசமா இருக்குங்கள் எண்டுவார் அப்பு .

அந்தக்காலத்தில அரசர் மார் கோயில்களைக்கட்டி அங்கை திருவிழாக்களைச் செய்யிறதை தங்கடை கவுரவமா நினைச்சவை. இப்பவும் சில காசுக்காரர் திருவிழாக்களை ஆடம்பரமாச் செய்யிறது தங்களுக்கு கவுரவம் எண்டு நெக்கினம் எண்டுவார் அப்பு.

சிலர் அநியாயமா உழைக்கிற காசைக் கொண்ணந்து திருவிழாச் செய்யிறதாலை தாங்கள் செய்யிற பாவங்கள் எல்லாம் காணாமல் போடும் இல்லாட்டில் அதிலை கடவுளுக்கும் பங்கு கிடைக்கும் எண்டு நெப்பினம் ஆக்கும் எண்டு அப்பு சிரிப்பார்.

திருவிழாக்கள் செய்யேக்கை போட்டிக்குச் செய்யாமல் ஆடம்பரங்களை இயலு மட்டும் குறைச்சு செய்தால் கடவுளுக்கும் புறியமா இருக்கும் அந்தக் காசை இல்லாத செல்லாத சனங்களின்ரை கல்வியைப் பொருளாதாரத்தை உயத்தப் பாவிக்கலாம் எண்டு ஆச்சி சொல்லுவா .

அதுமட்டும் இல்லை .முந்தி அரசர்மார் திருவிழாக்களைச் செய்யிறதுக்கு ஒரு காரணம் இருந்தது.

சனங்கள் இப்பிடித் திருவிழாக்களிலை ஐக்கியமாச்சினம் எண்டால் அரசாங்கத்துக்கெதிரா என்னமும் புரட்சி கிரட்சி செய்யிறதுக்கு அவைக்கு நேரமும் இருக்காது சிந்தனையும் இருக்காது எண்டதும் அதிலை ஒரு நோக்கம் எண்டுவார் அப்பு.

உண்ணாணச் சொல்ல வேணும் எண்டால் முந்தி ஊர்வழியை கோயில் குளம் எண்டு திரிஞ்ச சனங்கள் ஒரு சோலி சுறட்டுக்கும் போறேல்லை எண்டது ஓரளவுக்கு உண்மை எண்டுதான் சொல்ல வேணும் எண்டுவார் அப்பு .

எது என்னதான் இருந்தாலும் உப்பிடிக் கோயில் திருவிழாக்களிலை ஆன்மீகம், உளவியல், சமூகவியல், பொருளியல், அரசியல் எண்டு கனகாரணங்கள் பின்னிப்பிணைஞ்சு கிடந்ததாலதான் ஔவையார் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எண்டு சொன்னவவாக்கும் எண்டுவா ஆச்சி.

# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

## எழுதுமட்டுவாழ் நகரில்
## 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

*இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*

**உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.**
**மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்**
**அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்**

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்











4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

**தொடர்புகளுக்கு: 0777 43 5557**


இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.03.2024இல் வெளியிடப்பெற்றது.